Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

இலவசப் பிரதி

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

☞ உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகள்
☞ தரமான போட்டோப் பிரதிகள்
☞ கம்பியூட்டர் ரைப் செற்றிங் லேசர் பிரின்டர் வசதியுடன்
☞ மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள்
☞ வான், கார், ஆட்டோ போன்றவற்றை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும்.

நாடுங்கள்

RAINBOW Links
ரெயின்போ லிங்ஸ்,
214, முதலாம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 3170
(சி-073)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 4 ஆம் நாள் (21.10.2002) திங்கட்கிழமை இதழ் : 21

தமிழ்க்கூடல் நடைபெற்ற வீரசிங்கம் மண்டபத்தினுள்

## கைத்துப்பாக்கியுடன் நுழைய முயற்சித்த 'புளொட்' உறுப்பினர் மடக்கிப் பிடிப்பு

### இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்

(நமது நிருபர்)

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வு நடைபெறும் வீரசிங்கம் மண்டபத்தினுள் கைத்துப்பாக்கியுடன் நுழைய முயன்ற புளொட் இயக்கத்தின் முக்கிய நபர் ஒருவர் நேற்று மக்களால் பிடிக்கப்பட்டு பின்னர் விடுதலைப் புலிகளால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் இவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, இன்று அவர் மீது நீதிமன்ற விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:-

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழவு நடைபெறும் 2ஆவது நாளில் மாலை 5 மணியளவில் மாநாட்டு மண்டப நுழைவாசலில் உள் நுழைய முயன்ற நபர் ஒருவரிடம் வழமையான ஒழுங்கின்படி அழைப்பிதழை ஒழுங்கமைப்பாளர்கள் கோரியபோது

(10ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்க்கூடலின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்திற் காணலாம்.

# நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் முன்பாக அம்பாந்தோட்டையில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

## தங்கும் விடுதிக்கு பின் கதவாலேயே நுழைய முடிந்தது

(கொழும்பு நிருபர்)

**அம்பாந்தோட்டைப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று அங்கு விஜயம் செய்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவுக்கு எதிராக ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.**

நேற்று நண்பகல் தங்கல்ல ஓவர்சீஸ் ஹோட்டலில் அமைச்சர் ஆனந்த குலரட்ன தலைமையில் நோர்வே குழுவினருக்கு வரவேற்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜே.வி.பியினர் ஹோட்டலின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் பிரதான வாசலூடாக செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. அதனால் பின் கதவால் ஹோட்டலுக்குச் சென்ற நோர்வே குழுவினர் அங்கு அரச அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அப்பகுதி அபிவிருத்தி, வரட்சி நிவாரணப் பணிகள் குறித்து பேச்சுக்களை நடத்தினர்.

இதேவேளை - ஹோட்டலுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் – புறூவ் ஹொவ்டே வன்னியில் இன்று சந்திப்பு!

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே இன்று வன்னிக்குச் செல்லவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் கிழக்கு மாகாண நிலைமை தொடர்பாக அவர் ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று கிளிநொச்சிக்கு விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் ஜெனரல் புறூவ் ஹொவ்டே பயணஞ்செய்வார் எனத் தெரியவருகின்றது. (01)

## வடக்கு – கிழக்கு புனரமைப்பு பற்றி கொழும்பில் இன்று உயர்மட்ட மாநாடு!

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்குப் பகுதிக்கான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக இன்று கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

கொழும்பில் உள்ள திறைசேரிப் பணியகத்தில் நடைபெறவுள்ள மேற்படி மகாநாட்டில் மிக முக்கியமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

பிரதம மந்திரியின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், மற்றும் சரித்த ரத்வத்தை, பாஸ்கரலிங்கம் ஆகியோரும் அரசின் மேலும் பல உயர் அதிகாரிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டின்போது வடகிழக்குப் பகுதிகளில் நடைமுறைப்படுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 45,000 தப்பியோடிய படையினரை முப்படைகளும் அடுத்த வாரம் தேடும்

### பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜா உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடித் தலைமறைவாக உள்ள படையினரைத் தேடிக் கண்டுபிடித்துக் ங்கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சகல பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஊடாகவும் விடுத்துள்ள இந்த உத்தரவில் - அடுத்த வாரத்தில் இருந்து தலைமறைவாகியுள்ள படையினரைத் தேடிக் கைதுசெய்யும் நடவடிக்கையில் இறங்குமாறு அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவரைத் தவிர்த்து சந்திரிகா இரகசியக் கூட்டம்!

(கொழும்பிலிருந்து அருள்)

மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர்த்து தனக்கு நம்பிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்களுடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரகசியக் கூட்டமொன்றை நடாத்தியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று மாலை 6 மணிக்கு - ஜனாதிபதியின் இல்லத்தில் ஆரம்பித்த இந்தக் கூட்டம் இரவு 2 மணிவரை நடந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமானவர்களெனக் கூறப்படும் மங்கள சமரவீர, சரத் அமுனுகம, நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜெயந்த, விஜித் விஜேமுனி சொய்சா, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருட்பட பத்துப் பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### விண்ணாணம் விநாசியர்



இரகசியம் பரகசியமாகக்குள்ளதான் எல்லாம் வெளிக்கும்...

## தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்ப்பண்பாட்டை சர்வதேசத்திற்கு உயர்த்தியவர்கள் புலிகளே!

### தமிழக எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் பாராட்டு



(நமது நிருபர்)

உலகில் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு என்பவற்றைச் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்றவர்கள், அவற்றை உயர்த்திச் சென்றவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே என தமிழக எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் தெரிவித்தார்.

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

முன்னொரு காலத்தில் லெனின் கூறியபடி 'நான் கம்யூனிஸம் சார்ந்தவன் இல்லை, கம்யூனிஸ்டாக இருக்கவே போராடுகிறேன்' என்பதுபோல, நானும் கூற விரும்புகிறேன் - 'நான் போராளி இல்லை, ஆனால் இந்தப் போராளிகளின் பெயர்களைச் சொல்வதன் மூலம், இவர்களின் சாதனைகளை எடுத்துரைப்பதன் மூலம் நானும் ஓர் போராளியாக முயற்சிக்கிறேன்'. தாய்மண்ணை நேசிப்பது ஒவ்வொரு மனிதனினதும் உரிமை. இது இயல்பானது என்ப

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் 'இலக்கியச் சோலை'

# இன்றைய நாள் இனிய நாள்

**21.10.2002 - திங்கட்கிழமை**

மேடம் :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, உறவினர் வருகை, சயனசுகம், அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், தொழில் முன்னேற்றம்.

இடபம் :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, தேவையற்ற செலவு, எடுத்தகாரியம் தடை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம், தொழில் முன்னேற்றம்.

மிதுனம் :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, சமய அறிஞர் தரிசனம், ஆலயம்தரிசனம், கல்விமுன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம், தொழில் முன்னேற்றம்.

கர்க்கடகம் :- தேகசுகம்நன்று, பணவரவு நன்று, பொதுசேவையில் பங்கு, மதிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம், தொழில் முன்னேற்றக்குறைவு.

சிங்கம் :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, தெய்வத்தொண்டு, தெய்வவழிபாடு, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றக்குறைவு, வியாபாரம் மத்திமநிலை.

கன்னி :- தேகசுகக்குறைவு, பண வரவு குறைவு, புதிய காரியம் ஆரம்பிப்பது நன்றல்ல, தேவையற்ற பயம், கல்விமுன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

துலாம் :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, பெண்களால் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, வாகனபலன், கல்விநிலை சமம், வியாபாரம் சமம், தொழில் முன்னேற்றம் சமம்.

விருச்சிகம் :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, எதிரிதலை குனிவு, கடன்நீக்கம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம், தொழில் முன்னேற்றம் குறைவு.

தனு :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, தெய்வதரிசனபலன், சமயநூல் படித்தல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், தொழில் முன்னேற்றம்.

மகரம் :- தேகசுகக்குறைவு, பண வரவு குறைவு, தாயாருக்கு சுகயீனம், கொடுக்கல் வாங்கல்ப் பிரச்சினை, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

கும்பம் :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, எடுத்தகாரியம் வெற்றி, ஆடையாபரண பலன், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை, தொழில் முன்னேற்றம் சமநிலை.

மீனம் :- தேகசுகம் சமம், பண வரவு நன்று, வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

## நகராட்சி மன்றம் - பருத்தித்துறை

## தார் ஏற்றி இறக்கல் கூலிக்கான கூறுவிலை கோரல்

கொழும்பில் இருந்து நகராட்சி மன்றம், பருத்தித்துறைக்கு பாரவூர்தி மூலம் ஏ-9 பாதையூடாக 142 பரல் (140 லீற்றர் கொள்ளளவு) தாரினை ஏற்றி இறக்க கூலிக்கான கூறுவிலைகள் ( பெறுமதி சேர்வரி உட்பட) கோரப்படுகின்றன. கூறு விலைகள் தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என முகவரியிடப்பட்டு 28.10.2002ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நகராட்சி மன்றம் அலுவலகம்,
பருத்தித்துறை.
21-10-2002

நா.மணிவண்ணன்,
(ஜே.பி.யு.எம்)
உபதலைவர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

(சி-074)

## நீர் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்- நகர் ஆஸ்பத்திரி வீதி மற்றும் மத்திய பஸ் நிலையப் பகுதிகளுக்கான நன்னீர் விநியோகம் கடந்த சில நாட்களாக முற்றாக தடைப்பட்டுள்ளது. இதனால் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(111)

## மல்லாகம் மாதர் சங்கக் கூட்டம்

(ஏழாலை)

மல்லாகம் மத்திப்பகுதிக்கான மாதர்சங்க அங்குரார்ப்பண வைபவம் இன்று காலை 10 மணிக்கு, மல்லாகம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அப்பகுதி கிராம அலுவலரால் கோரப்பட்டுள்ளது.

(93)

## குதிரைகளின் நடமாட்டம்

(புன்னாலைக்கட்டுவன்)

பலாலி இராணுவப் பிரதேசத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை பத்துக்கும் அதிகமான குதிரைகள் குப்பிளான் பகுதிக்கு வந்தன. இவற்றை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்ததைக் காணமுடிந்தது.

இங்கு கூடி நின்ற மக்கள் ஆர்வமிகுதியால் அவற்றுள் ஒன்றை மடக்கிப்பிடித்து கட்டி வைத்துள்ளனர். இதை இராணுவத்தினரும் வந்து பார்வையிட்டனர். பொதுமக்களும் குதிரையைப் பார்வையிடுவதற்காகக் கூடுவதைக் காண முடிந்தது.

(83)

## நீத்தார் நயப்புரை



நயினை மண்ணில் உதித்த சான்றோன் தம்பையா-இலங்கைநாதன் 3.10.2002 ல் பூவுலக வாழ்வை முடித்து நயினை நாகபூசணியின் பாதம் சேர்ந்தார்.

கல்வியிலும், கடமையுணர்விலும சிறந்த ஓர் இடத்தைப் பெற்றதோடு சமூகநலன்களுக்காக முன்னின்று செயற்பட்ட செயல் வீரன். ஆசிரிய-மாணவ உறவுக்குப் புத்துரை செய்த புனிதன்.

பேசியபடி வாழ்ந்து மானிடத்தைப் பெரிதென்று உணர்த்திய பண்பாளனின் உயிர் ஒரு நொடிப் பொழுதில் பிரிந்தாலும், புகழ் அழியாது மண்ணில் நிலைத்து நிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

-கிருபானந்தா



# விளையாட்டு

## சென்னை கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 8 விக்கட்டுக்களால் வெற்றி



(சென்னை)

சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற இந்திய- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

முதல் இன்னிங்சில் இந்திய அணி 316 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 167 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் விளையாடிய அவ்வணி 229 ஓட்டங்களைப் பெற்று சகல விக் கட்டுக்களையும் இழந்தது.

ஹெயின்ஸ் 61 ஓட்டங்களையும் ராம் நரேஸ் சர்வான் 78 ஓட்டங்களையும் கார்ல் கூப்பர் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 விக்கட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. சஞ்சய் பங்கர் 20 ஓட்டங்களையும், ஷேவாக் 33 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களுடனும் ட்ராவிட் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விக்கட்டுக்களில்- சிறிநாத் இரண்டையும், ஷாகீர் கான் மூன்றையும், ஹர்பஜன் சிங் நான்கையும், கும்ளே ஒன்றையும் கைப்பற்றியிருந்தனர். இந்த போட்டியில் இந்திய அணி எட்டு விக்கட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

அடுத்த டெஸ்ட் போட்டி ஒக்டோபர் 30ம் திகதி முதல் நவம்பர் 03ம் திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

### சார்ஜா டெஸ்ட் கிரிக்கெட்

## பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 444 ஓட்டங்கள்



(சார்ஜா)

அவுஸ்திரேலிய-பாகிஸ்தானிய அணிகளுக்கு இடையே சார்ஜாவில் இடம்பெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 444 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் றிக்கி பொன்டிங் 150 ஓட்டங்களையும், ஸ்ரீவ் வோ 103 ஓட்டங்களையும், மத்தியூ ஹெய்டன் 89 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்சில் 1 விக்கட்டை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் 529 ஓட்டங்களை தெ.ஆபிரிக்கா குவிப்பு

(டாக்கா)

பங்களாதேஷ்-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளில் 4 விக்கட் இழப்புக்கு 529 ஓட்டங்களைப் பெற்று தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை தென்னாபிரிக்கா இடைநிறுத்தியது.

தென்னாபிரிக்க அணிவீரர்கள் கிறேன் சிமித் 200 ஓட்டங்களையும், ஹரி கிறிஸ்டன் 150 ஓட்டங்களையும், ஜக் கலிஸ் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 170 ஓட்டங்களுக்குச் சகல விக்கட்டுக்களையும் நேற்று இழந்து ஆட்டமிழந்தது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் ஆடத்தொடங்கிய பங்களாதேஷ் அணி 32 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கட்டை இழந்திருந்தது.


## 15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

**21.10.87-22.10.87 அன்று மரணித்த**
**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**

1. வைத்திய நிபுணர் அ.சிவபாதசுந்தரம்
2. வைத்திய கலாநிதி கே.பரிமேலழகர்
3. வைத்திய கலாநிதி கே.கணேசரத்தினம்
4. திருமதி.பா.வடிவேலு
5. செல்வி.லீலாவதி முத்தையா
6. செல்வி.மங்கையற்கரசி இராமநாதன்
7. திரு.கே.செல்வராசா
8. திரு.கே.கிருஷ்ணராசா
9. திரு.மு.துரைராசா
10. திரு.மி.சண்முகலிங்கம்
11. திரு.வி.வரதராசன்
12. திரு.கே.வேதாரண்யம்
13. திரு.ஜோன் பீற்றர்
14. திரு.இ.சுகுமார்
15. திரு.க.சிவலோகநாதன்
16. திரு.எஸ்.ஜெகநாதன்
17. திரு.கே.சிவராசா
18. திரு.கோ.உருத்திரன்
19. திரு.க.மார்க்கண்டு
20. திரு.இ.இரத்தினராசா
21. திரு.க.நவரத்தினம்

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள.

*அரசினர் பொது வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

(சி-072)



## தீபாவளியை முன்னிட்டு

**புதிய கனன் போட்டோக் கொப்பி மெசின்**

## அறிமுகப்படுத்தப்படுகிறது

**NP 7161 - விலை 167,000 /- + VAT + TAX**
**NP 1215 - விலை 155,000 /- VAT + TAX உட்பட**



Canon
NP 7161

பாவித்த சகலவிதமான
போட்டோ கொப்பி மெஷின்
ஆகக் கூடிய விலை 40,000/- ற்கும்,
ஆகக் குறைந்தது 10,000/- ற்கும்
எங்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன்
இதன் பெறுமதிக்கேற்ப
புதிய மெஷின் (NP 7161)
விலை கழிக்கப்படும்.

**நவகலா**
**Metro Polton Agent**

200, K.K.S. Road,
யாழ்ப்பாணம்.

(சி-064)

# 'கடத்தப்பட்ட' முஸ்லிம் இளைஞர் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது!

(அம்பாறை)

அக்கரைப்பற்று பதற்ற நிலைக்கு காரணமாக இருந்த முஸ்லிம் இளைஞர் கடத்தல் விவகாரம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டவரையும் அவருடன் கூடச் சென்றவரையும் கைதுசெய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சீனி முகமது அப்துல் வஜாத் என்ற முஸ்லிம் இளைஞரைக் கடத்தியதாக செய்தி வெளியானதையடுத்து அக்கரைப்பற்றில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. குறித்த இளைஞர் வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் அந்த இளைஞரையும், கடத்தல் இடம் பெற்றபோது அவருடன் கூடச் சென்ற இளைஞரையும் பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இருவரையும் நீதிமன்றில் நிறுத்தி மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. மேற்படி இளைஞர் புலிகளால் கடத்தப்பட்டதாக கூறியே அக்கரைப்பற்றில் பதற்ற நிலையை தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அடுப்பினுள் விழுந்த வயோதிபர் காயம்

(சங்கத்தானை)

அடுப்பு எரிக்கும்போது மயக்கமுற்று அடுப்பினுள் வீழ்ந்த வயோதிபர் - பலத்த தீக்காயங்களிற்கு உள்ளாகினார்.

அல்லாரையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் - வீட்டில் தனியாக வசித்து வந்த தம்பிஜயா என்பவர்- மயக்கமான நிலையில் அடுப்பினுள் வீழ்ந்ததால் இவர் பலமணி நேரம் கழித்தே மீட்கப்பட்டார். நெஞ்சு, முகம் ஆகிய பகுதிகளில எரிகாயங்களுக்குள்ளான நிலையில் இவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (30)

# காஞ்சிரங்குடா முகாமிற்கு அமைச்சர் மிலிந்த விஜயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமிற்கு பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் காலை விஜயம் செய்துள்ளது.

அண்மையில் பொதுமக்கள் ஏழு பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராயும் பொருட்டு இவர்களது விஜயம் அமைந்திருந்தது. இக்குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, சமாதான செயலணிக் குழுவின் தலைவர் பேர்னாட் குணதிலக ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

# புலிகளின் இரு முகாம்களுக்கு தொலைத்தொடர்பு வசதிகள் வழங்குக

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் இரண்டு முகாம்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ரூபஸ் குளமுகாம் மற்றும் கஞ்சிக்குடிச்சாறு முகாம்களுக்கே தொலைபேசி வசதியை செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொள்ள தமக்கு வசதி செய்து தருமாறும், இதன் மூலம் அவர்களுடன் அடிக்கடி தொடர்புகொள்வது சுலபமாக இருக்கும் என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் செயலரைக் கேட்டுக் கொண்டதற்கு அமையவே அவர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

முன்னதாக வன்னியில் புலிகளின் அரசியல் செயலகத்திற்கு தொலைத்தொடர்பு வசதி செய்ய அமைச்சர்



ஒஸ்ரின் பெர்ணாண்டோ

மிலிந்த மொறகொட உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப்பணி ஒன்றுகூடல் வவுனியாவில் நடந்தது!

(வவுனியா)

வெரித்தாஸ் வானொலியின் தமிழ் பணி இனிய இதயங்களின் ஒன்று கூடல் நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிதொடக்கம் 12 மணி வரை சிறப்பாக நடைபெற்றது

வெரித்தாஸ் வானொலியின் இயக்குனர், தமிழ்ப்பணி இயக்குனர், சாந்தோம் கலைஞர்கள் இந்த நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் வருகை தந்திருந்தனர். இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வெரித்தாஸ் வானொலியுடன் தொடர்புடைய வவுனியா மாவட்ட உறவுகள் கலந்து கொண்டனர். (3)

# அரசுடன் பேரம்பேச முடியாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸ்

## அமைச்சர் ஹக்கீம் கவலை

(கொழும்பு நிருபர்)

முஸ்லிம்களுக்கு தனி அலகுக் கோரிக்கையை முன்வைத்து முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளதால் அரசாங்கத்துடன் பேரம் பேச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்களுடன் நடத்திய



கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் நலனுக்காக அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுகின்ற நிலை தோன்றியிருந்தது. ஆனால் அந்த உடன்பாடு செய்துகொள்ளப்பட முடியாத நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் நலனுக்காகவே தனி நிர்வாக அலகுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதைச் சிலர் தமது சுயலாபத்திற்காகப் பயன்படுத்தி பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்பாடு செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதைவிட முஸ்லிம்களின் நலனுக்காக அரசாங்கத்துடன் பேரம் பேச முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# புதிய வடிவமைப்பில் பத்து ரூபாத்தாள்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி புதிய வடிவமைப்பிலான பத்து ரூபாத் தாளை அறிமுகம் செய்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட பத்து ரூபா பெறுமதியான தாளில் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி கையொப்பமிட்டுள்ளார்.

2001- டிசெம்பர் 12ஆம் திகதியிடப்பட்டுள்ள இந்தத் தாள் எம்-267-190001 தொடர் இலக்கத்தில் இருந்து ஆரம்பமாகின்றது.

சுமார் பதின்னான்கு வருடங்களுக்குப் பின்னர் பத்துரூபா தாள் புதிய வடிவமைப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் அறிமுகம் செய்யப்பட்டபோதும் சனிக்கிழமை வங்கி விடுமுறையாதலால் இன்றே வங்கிகளுக்கு மத்திய வங்கியால் விநியோகிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

# அமைச்சர் சந்திரசேகரன் பாலாவை வன்னியில் சந்திப்பார்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் நாளை வன்னிக்குச் செல்லவுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் நோக்கிலேயே அமைச்சர் சந்திரசேகரன் வன்னிக்குச் செல்லவுள்ளார்.



இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னேற்பாடுகளில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி பாலசிங்கம் ஈடுபட்டிருக்கின்றார். இந்தப் பேச்சுவார்த்தையில் மலையக மக்களின் பிரச்சனைகள் குறித்து விபரங்களைச் சமர்ப்பிக்கும் நோக்குடன் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே இரண்டு முறை வன்னிக்குச் சென்று அமைச்சர் சந்திரசேகரன் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் மலையக மக்களின் பிரச்சனைகள் குறித்துப் பேச்சுக்களை முன்னர் நடத்தியிருந்தார்.



சமாதானப் பேச்சுக்களின்போது மலையக மக்களின் பிரச்சனைகள் தொடர்பான விடயங்களையும் சேர்த்துக்கொள்வது தொடர்பாக அமைச்சர் சந்திரசேகரன்- கலாநிதி பாலசிங்கம் சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# மிருக உறுப்புகளை கடத்தி வந்த குருமார்!

(கொழும்பு)

திருச்சியிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் மூன்று இந்துக் குருமார் 'மிருகங்களின் உடல் உறுப்புக்களைக் கடத்தி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 4.40 மணியள வில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் பயணம்செய்த மூன்று இந்துக் குருமாரிடம் இருந்தே நரித் தலைகள், புலிப்பற்கள், முள்ளம் பன்றி முட்கள் போன்ற மிருக உறுப்புக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

பின்னர் இம்மூவரும் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (01)

## வெளிக்கள நிலைய பரீட்சை

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினரால் நடத்தப்படும் ஆண்டு 12, ஆண்டு 13 மாணவர்களுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் இதற்கு உரிய நேர அட்டவணை பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# கஞ்சிகுடிச்சாறுப் பகுதி மக்கள் விவசாய செய்கையில் மும்முரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் மீண்டும் விவசாய செய்கைக்கான ஆயத்தங்களை இப்பகுதி மக்கள் செய்து வருகின்றனர்.

17 வருடங்களாக இடம்பெயர்ந்து திருக்கோயில் பகுதியில் வசித்து வந்த இம்மக்கள் தற்போதைய அமைதி நிலைமையையடுத்து தமது சொந்த இடமான கஞ்சிக்குடிச்சாறுப் பகுதிக்கு திரும்பிச் செல்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தமது தோட்டக்காணிகளை திருத்தியமைத்து வருகின்றனர். மீள் குடியேறுவோருக்கான நிதி உதவி கிடைத்ததும் தாம் முழுமையாக விவசாயச் செய்கையை ஆரம்பிக்கவும் மீளக்குடியமரவும் முடியும் என இவர்கள் தெரிவித்தனர்.

இவர்களுக்கான மீள் குடியமர்வு நிதி வழங்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா உறுதியளித்துள்ளார். (8)

# அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பாக பொ.ஐ.முன்னணிச் செயற்குழு ஆராயும்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இன்று பொ.ஐ. முன்னணி விரிவாக ஆராயவுள்ளது என கட்சியின் செயலாளர் டி.எம்.ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் இன்று பொ.ஐ. முன்னணியின் மத்திய நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தின் போது நாட்டின் சமாதான நிலை பற்றியும் சமூக பொருளாதார நிலை பற்றியும் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் சமூக பொருளாதார நிலை பற்றியும் கட்சியின் எதிர்காலத் திட்டம் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்ட பின் நாட்டின் மக்களுக்குப் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நூலகம் அங்குரார்ப்பணம்

(ஊரெழு)

உரும்பிராயில் உள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்கான நூலகம் ஒன்று - கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒரு தொகுதி நூல்களை ஓய்வு பெற்ற அதிபர் சி.நடராஜா வழங்கினார். இதனால் சுமார் 40 பிள்ளைகள் பயன்பெறுவர். (96)

# மாவோ போராளிகளுடன் பேசுவதற்கு நேபாளப் புதிய பிரதமர் அழைப்பு!

(காத்மாண்டு)

நேபாளத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் மாவோ போராளிகளுடான கலகத்தை சமாதான பூர்வமாக தீர்ப்பதற்கு நேபாளப் பிரதமர் லோகேந்திரா பஹதுார் சந்த் தீர்மானம் எடுத்துள்ளார்.



புதிய பிரதமர் லோகேந்திரா பஹதூர் சந்த்

அவர் தமது அரசாங்கம் மாவோ போராளிகளுடன் பேசத் தயாராக இருப்பதாகவும், போராளிகளின் பதிலுக்குத் தான் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

பதவியைப் பொறுப்பேற்றதன் பினனர் முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் - சமாதானம் நிலைநிறுத்தப்பட்டதும் புதிய தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார். தேர்தல் மூலம முழு அதிகாரமுடைய பிரதமரைத் தெரிவதற்குப் பதிலாகக் கடந்த வாரம் மன்னர் ஜியானேந்திரா, பஹதூர் சந்தை இடைக்காலப் பிரதமராக நியமித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வேளையில் கடந்த ஆறு வருடங்களாக நேபாளிய இராணுவத்தினருக்கும் மாவோ போராளிகளுக்கும் இடையே ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறு வருட காலமாக நடைபெற்று வரும் மாவோ போராளிகளுடனான கலகத்தை முடிவிற்குக் கொண்டு வந்து எவ்வளவு விரைவாக தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துமாறு மன்னர் தெரிவித்துள்ளபோதும் திகதி எதனையும் நிச்சயமாகக் கூறவில்லை.

பாராளுமன்றத் தேர்தலை நவம்பர் மாத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும் - மன்னர் ஜியானேந்திரா நிறைவேற்று அதிகாரத்தை தன்வசம் எடுத்ததன் பின்னர் - தேர்தல் கால தாமதமாக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவோ போராளிகள் புதிய அரசியற்திட்டத்தினை வேண்டித் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென் கூறும் அதேவேளை - அரசு தற்போதுள்ள அரசியற் திட்டத்துடன் பல கட்சி ஜனநாயகத்திற்கான உத்தரவாதத்தையும் அரசியற் திட்ட மேலாண்மையையும் வலியுறுத்தி நிற்கின்றது.



மன்னர் ஜியானேந்திரா

இதேவேளை கடந்த ஆறு வருடங்களாக மாவோ போராளிகள் நடத்தி வரும் ஆயுதக் கிளர்ச்சியில் இதுவரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்துள்ளமையும் இதனால் நேபாளம் காலத்திற்குக் காலம் வன்செயல்களுக்குள்ளாவதும் குறிப்பிடத்தக்கது.



நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் மாவோ போராளிகளுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

# அமெ. - இந்திய கூட்டுப் பயிற்சி; நவீன துப்பாக்கி அறிமுகம்!

தோட்டாக்களை சிதறடித்துச் சுடும் அதி நவீன துப்பாக்கிகளை இந்திய அதிரடிப்படை வீரர்கள் முதற் தடவையாக அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சியின்போது பயன்படுத்தியுள்ளனர்.

தீவிரவாதிகளின் இடங்களில் அதிரடித் தாக்குதல் நடத்துவதற்கான முதலாவது தாக்குதல் பயிற்சியை இந்திய, அமெரிக்கத் துருப்புக்கள் இணைந்து நடத்தியுள்ளன.

இந்தப் பயிற்சியின்போதே இந்திய அதிரடிப்படை வீரர்களுக்கு அதி நவீன துப்பாக்கி சுடும் பயிற்சி வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# இந்தோனேசியாவில் குண்டுவெடிப்புகள் தொடரலாமென அச்சநிலை!

## தனது நாட்டவர்களைத் திருப்பியழைக்கிறது அமெரிக்கா

(பாலி)

இந்தோனேசியாவின் பாலித் தீவில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலின் விளைவாக "மேலும் தாக்குதல் தொடரப்படலாம்" என்ற அச்சத்தினை அமெரிக்காவின் ராஜாங்கத்திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து தனது உல்லாசப்பயணிகளை தென்கிழக்காசிய நாடாகிய இந்தோனேசியாவுக்கான பயணத்தைத் தவிர்க்குமாறு மேற்படி திணைக்களம் வேண்டியுள்ளது.

கடந்த வார இறுதியில் - இரண்டு இரவுநேர விடுதிகளில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் கிட்டத்தட்ட 200 மக்கள் கொல்லப்பட்டதும், இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அவுஸ்திரேலிய உல்லசப்பயணிகளே பெரும்பான்மையினர் என்பதும் தெரிந்ததே.

ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் - இந்தோனேசியாவிலுள்ள அமெரிக்காவின் நலன்பேண் மையங்கள் மேலும் தாக்குதலுக்குள்ளாவதற்கான சாத்தியங்களைத் தீவிரவாத சக்திகள் திட்டமிட்டு வருவதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பாலித் தீவில் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் கூடுதலாக வதியும் இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலானது தனிப்பட்ட அமெரிக்கப் பிரஜைகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருத இடமுண்டு என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை - இந்தோனேசிய அரசாங்கத்தினர் இக்குண்டுத் தாக்குதலுக்கு அல் கெய்டா அமைப்பினரே காரணம் எனக் கூறியுள்ளனர்.

திங்கட்கிழமைக்குள் இந்தோனேசியாவிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து அமெரிக்கப் பிரஜைகளையும் வெளியேறுமாறு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கோரியுள்ளது.

கடந்த இரு வருடங்களாக இந்தோனேசியா முழுவதும் சமய, அரச மற்றும் வியாபார இலக்குகளில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# காஷ்மீரில் ஆட்சியமைப்பது தாமதம்; ஆதரவு திரட்டுவதில் கட்சிகள் மும்முரம்!

(ஸ்ரீநகர்)

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் அரசியற் கட்சிகள் புதிய மாநில அரசை அமைப்பதற்கு மேலும் கால அவகாசம் கோருகின்றன

காஷ்மீர் மாநில ஆளுநர் கிரிஷ் சந்திரா சக்சேனா, ஸ்ரீநகரில் பத்திரிகையாளருடனான சந்திப்பின் போது - புதிய அரசு அமைப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைவதாக தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது- சாத்தியப்படக் கூடிய குறுகியகால எல்லையில் புதிய அரசு பதவி ஏற்க வேண்டும் என ஆளுநர் சக்சேனா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த தேர்தலில் எந்தவொரு அரசியற்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை என்பதுடன், அரசியற் கட்சிகள் கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்கான ஏறபாடுகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை வரை தோல்வியே கண்டுள்ளன.

இதேவேளை - சுயேட்சையாக வெற்றி பெற்ற மாநில சபை உறுபபினர்களை தம்மோடு இணைத்துக் கொள்வதற்கான பிரயத்தனங்களை பல கட்சிகளும் செய்து வருகின்றன.

காங்கிரஸின் தலைவர் குலாம் நபி ஆசாத் கோடைக்கால தலைநகரான ஸ்ரீநகரில் பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் - தாம் மீண்டும் ஒரு தடவை மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- பரூக் அப்துல்லாவின் கட்சி படுதோல்வியடைந்துள்ள நிலையில் மக்கள் ஜனநாயக கட்சியும் காங்கிரஸும் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளன. எனினும் இவ்விரு கட்சிகளுக்குள்ளும் யார் முதல்வர் பதவியை ஏற்பது என்பது தொடர்பாக இழுபறி நிலவுகின்றது.



குலாம் நபி ஆசாத்துடன் ஆளுநர் சக்சேனா.

தற்போதுள்ள நிலையில் புதிய அரசு பதவியேற்கும் வரை ஆளுநரின் நிர்வாகம் அங்கு நிலவுகின்றது. என்றுமில்லாதவாறு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட செயற்பாட்டாளர்கள் தேர்தல் வன்முறையில் உயிரிழந்துள்ளனர்.

## 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' இரண்டாம் நாள் நிகழ்வுகள்

படங்கள்: விதுர்ஷன்.



வல்வை அனந்தராஜ்



ஈழவேந்தன்



பேராசிரியர் நந்தி



தமிழன்பன்



செங்கை ஆழியான்



அன்புமணி



முத்தழகு





சிவநேசச்செல்வன்



செ.யோகராசா



தி.ஞானசேகரன்



அன்ரனி ஜீவா



க.ரதிதரன்





# இலக்கியச் சோலை

## A-9 என நீளும் நினைவுகள்

பகுதி இரண்டு



யானைக் காடதின் ஊடே புகுந்ததும்
உப்புத் தரவையின் ஓரமாய்ப் போனதும்
சோனவாரியாய் பெருகியே ஓடுஞ்..சிற்
றோடை யோடு கைகோர்த்துக் கிடந்ததும்,
மோனனாம் முருகண்டி விநாயக
மூர்த்தி அருளினால் துன்பத்தை வென்றதும்
ஆன... A-9 வீதியின் ஓரம்... என்
அகம் அமர்ந்து கொண்டென்னை அழைக்குது!

இந்த மண்ணிலோர் புற்றுநோய் போலவே
இனப்பிரச்சனை தோன்ற... எம் செந்தமிழ்ச் சந்ததிக்கே
சாபம் கிடைத்தது.
சாவுந்துன்பமும் தோளேறி ஆடின.
அந்தரங்களும் அவலமும் உற்றதால்
அகதிப்பட்டம் வரமாய்க் கிடைத்தது.
சந்தனம் மணத்திட்ட நம் வாழ்வினை
கந்தக மணஞ் சாய்த்துச் சிரித்தது.

ஈழத்தின் தலையான யாழ்ப்பாணத்தின்
இரையைக் காவிடும் 'உணவு வழி' யென
நீளமான இவ்வீதி கிடந்ததால்
நீசர்கள் இதன் முக்கியம் எண்ணினர்.
ஆழவேரோடி கழுத்தை நெரித்திட
ஆனையிறவிலே ஆப்புக்கள் வைத்ததால்
பாழடைந்ததிப் பாதை; அதன் பின்னே
பாவம்... பலநாட் தனியக் கிடந்தது.



- ஜெயங்கொண்டான்

## முகங்கள்





உருமியும் பம்பையும்
கரையேறிய இரவுகளில்...
நீங்கள் -
எனக்காகப் பாடியது -
போதும்....!

இனி,
என் பாட்டை
நானே பாடுவேன்...!

உன்பாடலில்
நீ இருக்கவேண்டும்
என்கிறீர்கள்
என் பாடலில்
நான் இருக்கிறேன்.
ஆனாலும்
நான் பாடுவது
பாடலாக உங்களுக்குப்
படவில்லை....!

நீங்கள் இலக்கணப் போலிகள்.
நாங்களோ -
வேற்றுமை உருபுகள்.
விமர்சன வெட்டியான்கள்
எங்கள் உயிர்ப் பாடல்களுக்கு
ஆணி அடிக்க இயலாது...!

உங்களில் சிலர்
சொற்களால் சோறு
போடுகிறார்கள்.
நானோ,
பசிக்கும் பாடை கட்டுகிறேன்.

நிகழ்காலம் நிராகரித்ததை
வருங்காலம் வரவு
வைத்துக்கொள்ளும்.
என் பாடல்கள்
இன்னொரு உதாரணம்...!

- வலம்புரிஜான்.

## உள்வெளி

✦ 'இலங்கை இலக்கியப் பேரவை'யின் (சாகித்திய மண்டலம்) 'தேசிய இலக்கிய விழா'வும் விருதுகள் வழங்கலும், சென்றமாதம் 30ஆம் திகதி, கொழும்பு 'பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்' நடைபெற்றது.

புகழ் பெற்ற கன்னட எழுத்தாளர் 'யூ.ஆர்.அனந்தமூர்த்தி' இந்தியாவிலிருந்து வந்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இவரது 'சம்ஸ்காரா', 'பிறப்பு' ஆகிய நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஏற்கனவே தமிழ்நாட்டில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'சம்ஸ்காரா' சிறந்த கலைத் திரைப்பட மாகவும் புகழ்பெற்றிருக்கிறது!

பிரதமர் 'ரணில் விக்கிரமசிங்க' முதன்மையாளராக இவ்விழாவில் கலந்து கொண்டார்.

சென்ற ஆண்டில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களிற்கான பரிசுகளை, ஏழு படைப்பாளர்கள் பெற்றனர். 'லெ.முருகபூபதி' (நாவல்), 'அல் அஸீமத்' (சிறுகதை), 'ரி.எல்.ஜெளபர்கான்' (கவிதை), 'சோ.பத்மநாதன்' (மொழி பெயர்ப்பு), 'கந்தையா சிறீகணேசன்' (நாடகம்), 'ச.அருளானந்தம்'(சிறுவர் இலக்கியம்), 'கலாநிதி சி.பத்மநாதன்' (ஆய்வு) ஆகியோர் இவ்வாறு பரிசுகள் பெற்றவர்கள்.

எழுத்தாளர்'தி.ச.வரதராசனி'ற்கு (வரதர்) 'சாகித்திய ரத்ன' விருது வழங் கப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளில், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான சிறீலங்கா அரசின் கொடூர யுத்தம் தீவிரமடைந்திருந்தது; பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, போக்குவரத்துத் தடை என்பனவும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்தன. இந்த இன அழிப்புச் சூழலில் அந்தத் தேசிய இனத்தின் 'கலாசார வளர்ச்சிக்கு' உதவுவதாகக் காட்டும் ஒரு நடவடிக்கையான 'இலக்கியப் பரிசுகளைப்' பெறுதல் சரியானதல்ல. அந்த அரசுப் பரிசுகளைப் பகிஷ்கரித்தல் இனவெறி அரசின் 'கோரமுகத்தை' உலகிற்கு அம்பலப்படுத்தும் என்ற கண்ணோட்டம், கலாசாரவாதிகளில் ஒரு சாராரிடம் நிலவியது. ஆயினும் அந்தக் காலங்களில் ஒரேயொருவர்-'மாமனிதர்' சிரித்திரன் சுந்தர் மட்டுமே தனக்கு வழங்கப்பட்ட தேசிய இலக்கியப் பரிசினை ஏற்க மறுத்தார். ஏனைய எழுத்தாளர்கள், தமக்கு வழங்கப்பட்ட பரிசினை-பெருந்தொகைப் பணத்தை- தயக்கமேதுமின்றிப் பெற்று மகிழ்ந்தனர் என்பது ஏமாற்றந்தரும் கடந்த கால இலக்கிய வரலாறு!

இத் தருணத்தில், அரசின் உயர் விருதுகளைக் கொள்கை அடிப்படையில் நிராகரித்த-மதிப்பிற்குரிய சிங்களக் கலைஞர் இருவரின் பெருமித நினைவுகள் மனதில் நிழலாடுகின்றன.

'சிறந்த இசையமைப்பு', 'சிறந்த மெட்டு' என்பவற்றிற்கான 1984ஆம் ஆண்டுக்குரிய 'ஜனாதிபதி விருதுகள்' இரண்டு தனக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோது, திரைப்பட இசையமைப்பாளர் 'எச்.எம்.ஜயவர்த்தனா' அவற்றைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். புகழ்பெற்ற இசையமைப்பாளர் 'பிறேமசிறி ஹேமதாச'தான் இவ் விருதுகளிற்குப் பொருத்தமானவர் என்பது அவரது நிலைப்பாடு.

அடுத்து சில ஆண்டுகளின் முன்னர், தனக்கு வழங்கப்பட்ட சிறந்த நெறியாளரிற்கான ஜனாதிபதி விருதைச் சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து பெற்றுக்கொள்ள, இளம் திரைப்பட நெறியாளர் 'பிரசன்ன விதானகே' மறுத்து விட்டார். தனது 'புறஹந்த களுவற' (பௌர்ணமியில் ஒரு மரணம்) திரைப் படத்தைத் தடைசெய்துள்ள ஓர்அரசிடமிருந்து விருதுபெறத் தான் விரும்ப வில்லையென்பது, அவர் தெரிவித்த கருத்து.

எவ்வாறாயினும், இன்று நிலைமை மாறியுள்ளது. யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன ஏற்படுத்தப்பட்டுத் தமிழர் தரப்பிற்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்ற 'சமாதானச் சூழல்' நிலவுகின்றது! இத்தருணத்தில் நடைபெற்ற 'தேசிய இலக்கிய விழா'வில் தமிழ் எழுத்தாளர்கள் பரிசுகளையும் விருதினையும் பெற்றுக்கொள் வதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

பரிசும் விருதும் பெற்ற படைப்பாளர்களிற்கு வாழ்த்துக்கள்!

ஆயினும், சில உறுத்தல்களைப் பதிவுசெய்தல் அவசியமெனக் கருது கிறேன். அரசியல் தீர்வுக்கான உரையாடல்கள் ஆரம்பமாகவுள்ள இத் தருணத்திலும், நடைபெற்று முடிந்த 'தேசிய இலக்கிய விழா'வில் தமிழ் மொழிக்கு சம உரிமை வழங்கப்படாதமை கண்டிக்கத்தக்கது.

அ) சிங்கள மொழியிலமைந்த பதினெட்டு நூல்களிற்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளபோது ஏழு தமிழ் நூல்களிற்கு மட்டுமே பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன!

ஆ) விழாவில் வழங்கப்பட்டுள்ள நினைவிதழில் தமிழ் மொழிக்கு உரிய இடம் ஒதுக்கப்படவில்லை. பரிசு பெற்ற தமிழ் நூல்கள் பற்றிய விபரங்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே தரப்பட்டுள்ளன.

இ) முதன்மையாளராக விழாவில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சு சிங்களத்தில் நிகழ்த்தப்பட்டது;. அதற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படவில்லை.

முன்பு வெளியான சிற்றிதழொன்றினது தலையங்கத்தின் ஒரு பகுதியினைப் பொருத்தங்கருதித் தருகிறேன்

"காலியில் நடைபெற்ற சாஹித்திய விழா தொடர்பாகப் பல அதிருப்திக் குரல்கள் படைப்பாளர்களாலும் தமிழ் மக்களாலும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. கருத்தரங்குகள், புத்தகக் கண்காட்சிகள் என்பனவற்றில் தமிழுக்கு இடங்க கொடுக்கப்படாததோடு, குடியரசுத் தலைவர் பங்குபற்றிய இறுதி நிகழ்ச்சியாகிய 'பரிசளிப்பு' வைபவத்திலும் ஒரு தமிழ்ச் சொற்பொழிவுமே இடம்பெறாததும் கண்டிக்கப்படத்தக்கது. தமிழ்ப் படைப்பாளிகளும் தமிழ் மக்களும் இவ் விழாவிற்கு வருகை தருவார்களென்ற 'பிரக்ஞை' விழா அமைப்பாளர்களுக்குக் கட்டாயம் இருந்திருக்க வேண்டும்.

...இவ்வாறு உணர்த்துவதில் சாஹித்திய மண்டலத் தமிழ்க் குழுவினருக்குப் பெரும் பொறுப்புண்டு."

- *'அலை' (கார்த்திகை1975)*

இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னரும் அதே அவல நிலைமை தான் தொடர்கிறதென்றால்....!?

✦✦

அச்சாக்கத்தின்போது ஏற்படும் சில தவறுகளினால் கருத்துக்கள் திரிவடைந்து, வெளிப்பாட்டின் 'ஒருமைத்தன்மை' பாதிப்புற்று விடுகிறது. சென்ற வார 'உள்வெளி'யில் இத்தகைய தவறுகள் நேர்ந்தமைக்கு வருந்துகிறேன். தவறான பிரயோகம் முதலிலும், திருத்தம் அதனையடுத்தும் கீழே தரப்பட் டுள்ளது. திருத்தி வாசிக்கவும்.

அறுபது ஆண்டுகள்-நூறு ஆண்டுகள், செலுத்தல் வேண்டும் - செய்தல் வேண்டும், அமரதாஸ-அமரதாஸ், அதிஷ்டங்களுங் கொண்ட- அதிர்வுகளுங் கொண்ட, முன்னுரையாக-முரணுரையாக, இப்பந்தியை - இப்பத்தியினை.

நூல் அறிமுக நிகழ்வின்போது எனத் தொடங்கும் பந்திக்கு முன்னால், பின்வரும் பந்தியைச் சேர்த்துக் கொள்ளவும்:

இவ்வாண்டு மார்ச்மாதம் பிற்பகுதியில், கொழும்பிலுள்ள 'இனத்துவ ஆய்வுகளிற்கான 'சர்வதேச நிலையத்'தில் இந்நூலின் அறிமுக நிகழ்வு நடைபெற்றபோது, பேராசிரியர் கா.சிவத்தம்பியும் கலந்துகொண்டார். அப்போது அவர் ஆங்கிலத்தில் வாசித்த கட்டுரையில்,

"இலங்கைத் தமிழ் இலக்கியத்துடனான எனது ஐம்பது வருடச் செயலீடு பாட்டில், முன்னுதாரணம் கூறமுடியாத நிகழ்வு இதுவாகும். முழுவதும் இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்காக தொகுப்பு வருவது இதுதான் முதல் முறை" என மகிழ்ச்சி தெரிவித்தார்.

- சூரி



சிறுகதை

# ரோஜாப் பெண்

அவள் முகம் மலர்ந்திருந்தது. ஒரு பூவின் மலர்வோடு ஒளி தங்கிய முகத்தின் விழிகள் ஒருவித ஆனந்தக்கிறக்கத்தைப் போர்த்திருந்தன. மெல்லத் தன்விரல்களால் வயிற்றை வருடிய போது சொலலவியலாத சந்தோஷத்தை உணர்ந்தாள். உள்ளுக்குள் வளர்கின்ற சின்ன உயிர் அள்ளி ஏற்றிய சந்தோஷந்தானே முழுதும்.

அவன் இன்னும் சிறிது நேரத்தில் அலுவலகத்தில் இருந்து வந்துவிடுவான். பிறகு இப்படி ஆறுதலாக இருக்க முடியாது. அல்லது அவளது பாஷையில மகாராணிபோல வீற்றிருக்க முடியாது. மகாராணிகள் மட்டுமா ஒரு இடத்தில் ஆண் மகனின் முன்னிலையில் ஓய்வு கொள்ள முடியும்? அவ்வாறாயின் அம்மா ஒரு மகாராணியாக இருந்தாள். வாழும் நாள் முழுதும் தன் வசீகர விழிகளால் அன்பு சொரிந்தே அப்பாவுடன் வாழ்ந்திருந்தாள். அவளது பேசும் விழிகளைப் புரியும் ஆற்றல் அப்பாவுக்கு இருந்தது. சில்லென்று வீசிய குளிர் காற்றில் சிலிர்த்தாள்.

குட்டி இளவரசிக்குக் குளிருமோ......?

அம்மா இருந்திருந்தால் கேட்டிருக்கலாம். அவள்தான் இரு சிற்றூர்களின் அப்பால் வாழ்க்கைப்பட்டாகி விட்டதே.

அவள் பார்வை தன்னிச்சையாய் வேலியோரம் ஓடிற்று. ரோஜாவேலி பற்றையாய் அடர்ந்திருந்தது. பூக்கள் நெருங்கிப் பூத்திருந்தன. அவளது மகள்கூட ஒரு ரோஜாப் பெண்ணாக இருக்க வேண்டும். தன்னைத்தான் காவல் செய்யத்தக்க மகாசக்தியாக ஒளிரவேண்டும். மெல்லச் சிரித்தன ரோஜா மலர்கள். ஆனால் முள்ளிருப்பதில் பயமுறுத்தினவா? பார்க்கலாம் சொல்கின்றனவோ?

'ரோஜாப்பெண். ரோஜாப் பெண்'

வாய்விட்டுக் கிசுகிசுப்பாய்ச் சொன்னபோது சொல்லவியலாத சந்தோஷம் மனதில் முட்டிற்று. உலகம் வெளிப்பாய்த் தோன்றிற்று.

அவளுக்கு உரத்துச் சிரிக்க முடியாது. பழகிப்போய் விட்டது. நல்ல குடும்பத்துப் பெண்கள் மிருதுவாகவே சிரித்துக் கொள்வார்கள் என்று அத்தை சொல்லியிருந்தாள். இவளது குழந்தைப் பருவமும், கன்னிப் பருவமும்கூட அத்தையுடன்தானிருந்தது. மூன்றாவது பெண்ணாய் இவள் பிறந்தபோது அம்மா கண் கலங்கியபோது குழந்தைகளில்லாத அத்தை இவளைக் கையேற்றாள். பெண்பிள்ளையைப் பண்பாக வளர்ப்பதாக உறுதியளித்தாள்.

அத்தையுடனான இரவுகள் இனியவை. கண்ணம்மா என்று சொல்லி முத்தமிடுவாள். மடியில் படுத்தித் தலைகோதுவாள். நிறையக் கதைகள் சொல்வாள். இவள் கண்மூடிப் படுத்திருப்பாள். செவிகள் மட்டும் திறந்திருத்தல் ஒருவகைச் சுகம். இவளுக்குச் சின்ன வயதிலேயே அது பிடிபட்டிருந்தது. அத்தையின் உலகம் சிறு வட்டமிட்ட உலகம். உள்ளங்கை அனுபவம் அவளது. அவளது கதைகள் அநேகமாகப் பெண்களின் பொறுமை பற்றிக் கூறும். இரவின் கனிந்த அமைதியில் அத்தையின் மென்குரல் தனிராக கீதமாய் எழும்பும்.

அது ஒரு அழகான கிராமம். வரட்சி கவ்விய கிராமம்.

எங்கும் பட்டினி. பசி நிறைந்த குழந்தைகளின் அழுகை.

வானம் பார்த்த பூமி மழைக்காய் இரந்து கிடந்தது.

ஒரு துளி. ஒரே ஒருமுறை வானம் திறக்காதா? என்ற ஏக்கம்.

அத்தை நிறுத்துவாள். அந்த ஏக்கத்தை ஆழப்படுத்துவதான மௌனத்தை இவள் குழப்புவதில்லை. மௌனம் அழகானது. அதைக் காயப்படுத்தக்கூடாது. அவளது சின்ன மனம் முழுதும் கிராமம் விரியும்.

அந்தக் கிராமத்தில் ஏழைப் பெண்ணொருத்தி இருந்தாள். அவளது சின்னமகள் கிரிசாம்பாள். சின்னஞ்சிறுமி. பொறுமை நிறைந்தவள். துடுக்குத்தனமும் குறும்பும் அற்றவள். நிறைய ஆண்பிள்ளைகளும் பின்னர் பெண்பிள்ளைகளுமான நீண்ட வரிசையில் இறுதியாக அச்சிறுபெண் நின்றாள். அவ்வூர்ச் செல்வந்தரின் பசிப் பிணி தீர்க்கும் முயற்சியில் மோதகங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

வம்புப் பெண்களும், குறும்புப் பையன்களும் முண்டியடித்து விழுந்தெழும்பினார்கள். ஆனால் கிரிசாம்பாள் பொறுமையாக ஒதுங்கி நின்றாள். அவள் கண்களில் நம்பிக்கை ஒளிர்ந்தது. மோதகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை.

இவ்வாறாகத் தொடரும் கதை இவள் மனத்தை அள்ளிச் செல்லும். அக்கதை இறுதியில் பொறுமையுற்ற பெண் தங்கமோதிரத்தை உடைய மோதகத்தைப் பெற்றாள் என்று கூறி பெண் பொறுமையின் பெருமை கூறும். இவ்வாறான பல கதைகள் அவளது வாழ்வை மென்மையான பெண்ணாக வடிவமைத்தன.

பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ பொறுமையுடன் இருந்து கொள்ள வேண்டும். புருஷன் பிறன்மனை நாடிக் களைத்து வந்து கதவு தட்டும்பொழுதில், முன்பொரு நாளிலான மாசறுபொன்னே! வலம்புரிமுத்தே! எனும் அவனது உளறல்களை நினைவுகூர்ந்து அறுசுவை உணவைப் பரிமாறுவாள் பெண். அவள் கண்ணகி. அவளை உலகம் வணங்கும். அவன் பரத்தையரை நாடினால் கூடையில் சுமந்து சென்று அவர்களின் வீட்டில் விட்டுவருவாள் பெண். அவள் நளாயினி. புருஷன் மனதில் சந்தேகம் திளைக்கிற பொழுதில் தூய்மையை நிரூபிக்கத் தீயினுள் பாயத்தக்கவள் அவளெனின், சீதாப்பிராட்டியெனக் கற்பின் குறியீடாக ஆகமுடியும் அவளுக்கு. காலகாலமாய்க் கல்லாய்க் கிடந்து ஒரு ஆண்மகனின் பாதம் படுகையில் மீட்சியுறுபவள் அகலிகைப் பெண். தான் மகாசக்தி என்பதைப் புரியாத பாவனையில் சிவனின் இடமாகி நளினஞ் சுமந்து அருள் நகை சொரிய வேண்டும் அவள். இப்பெண்களின் வரிசையில் அவளும் இருந்தாள். அவன் ஆத்திரமாய் கன்னத்தில் அறைந்த பொழுதில் மெல்ல விழிகளை மலர்த்தி அவனைப் பார்ப்பாள்.

முறைப்பு என்ன வேண்டியிருக்கு? அவனது உறுமலுக்கு நிலம் பார்ப்பாள். கண்ணிமைகள் வெட்டிக் கொள்ளக் கண்ணீர் துளியாய் உருளும். மெதுவாய்க் காயும் கன்னத்தில் படிந்த கண்ணீர். அவள் துடைப்பதில்லை. காற்று அதை உலர்த்தும்.

வயிற்றில் அதிர்வு தெரிந்தது. மெதுவாக அசைந்தாள். ஆனந்தச் சிலிர்ப்பு மனதில் ஓடிற்று. பிஞ்சு மகள் காலால் உதைப்பாளோ? கருவறையைச் சிறையாய்க் கருதிய சினத்தில் வெளிவரத் துடிக்கும் தவிப்போ? இன்னும் கொஞ்ச நாள் தான். கடந்த மாதம்தான் மகளெனத் தெரியவந்தது. அவன் உற்சாகம் வடிந்த முகத்தில் சற்றே சிணுங்கிக்கியபடி அந்தச் செய்தி கேட்டான். அவளுக்கு அப்படி இல்லை. அவள் உயிர் கொடுக்கின்ற புதிய ஜீவிதம் அந்தக் குழந்தை. மூத்த மகனையும் அவ்விதமே பாசங்கொண்டு வளர்த்தபோதும் ஆறாம் வகுப்பில் அவனைப் பிரியவேண்டி வந்தது. அடுத்த நகரில் இருக்கின்ற பிரபல்யமான ஆண்கள் பாடசாலையின் விடுதியில் அவனைப் புருஷன் சேர்த்து விட்ட செய்திகூட குழந்தையைப் பிரியும் நாட்களில்தான் அவளுக்குத் தெரியவந்தது. அவனது செயல்களில் குறுக்கிடுந் தைரியம் அவளுக்கில்லை.

அவனது அலுவலக வசதி கருதி அவள் அவனருகில் வாழ வேண்டியிருந்தது. இப்போது விடுமுறைகளில் வரும்போதுகூட வேறு யாரோபோல ஒட்டாமல் நடந்து கொள்கிறான் மகன். இவளின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதாய் உணர்ந்தாலும் அமைதியாக இருப்பாள். நீண்ட இடைவெளியின் பின் அவளை ஆதரவு செய்ய ஜனித்திடும் குழந்தை இவள். ஒரு பூவின் மகளென உலகிற்கு முகங் காட்டுவாள் அவள். மென்சிவப்பு வரணப்பூக்கள் சிதறிய சட்டையைக் கைநீட்டி எடுத்தாள். இந்தப் பூக்களின் மேலே அழகான மஞ்சள் மலராய் மகளின் முகம் மலரப் போகிறது.

'பெயரென்ன வைப்பது அவளுக்கு?' ஆயிரமாயிரம் பெயர்களைக் கற்பனையில் வைத்தாகி விட்டது. காற்றில் எழுதிப் பார்த்தாகி விட்டது. ஆனால் மறுகணமே அவற்றை அழித்துவிடுகிறாள் அவள். ஒருநாள், மகளெனத் தெரிய வந்த பிறகு அவனிடம் கேட்டாள்.

பேரென்ன வைக்கிறது?.....

'பிறக்கட்டும் பார்ப்பம். எதை வைச்சால் என்ன...' கதை தொடராது முறிந்து போனது. ஆனால் அவள் கனவுகள் முறியவில்லை.

'துளசிகா..... மெல்ல அழைத்துப் பார்த்தாள். பிறகு அது 'துளசி' எனவே சுருங்கும். துளசி என்றால் புகழ். அவளது சின்னமகள் புகழின் ஒளிர்வில் வசிப்பாள்.

'நிதர்சனா' என்று அழைக்கச் சொன்னாள் அம்மா. பேரக் குழந்தை உண்மையின் உறைவிடமாய்த் திகழவேண்டுமாம். ஆனால் பழகிப் போன பழைய பெயர்களில் ஒன்றாய்க் காற்றிழுத்துச் செல்லும் அதை வேண்டாம். துளசிகா கூட பொதுவான ஒரு பெயராகத் தானிக்கிறது.

'யுகசாதனா............' என அழைக்கலாம். யுகங்களைக் கடக்கும் வண்ணம் சாதனைகளை செல்ல மகள் செய்வாள். காற்று அவளின் பெயரைக் காலகாலமாய்க் காவித் திரியும். ஆனால் அந்த அழகிய பெயர் 'யுகா' எனச் சுருங்கிக் கருத்திழந்து போகும் ஆபத்துண்டு.

இனிய பூக்களின் நறுமணங் காவியதென்றல் அவள் சூட்டிப் பார்க்கும் அழகிய பெயர்களை அவளது மிருதுவான குரலில் காவிப்போகும். அதிகாலையில் எழும் பறவைகளின் கீதங்கள்போல் இனிமையாக அம்மா என்று குட்டி மகள் அழைக்கும் நாளுக்காய் தாய் மனம் ஏங்கிற்று. மறுகணமே அழகிய சந்தனநிறப் பட்டுப் பாவாடை சட்டையோடு இவளது சுட்டுவிரல் பற்றி நடக்கும் சின்னப் பெண்ணாய் மகளின் தோற்றங் கண்டாள். பிறகு ஓர் அழகிய கன்னிப் பெண்ணாய்ச் செல்லமகள் நடந்தாள். சுருங்கச் சொன்னால் மகள் பற்றிய நினைவுகளால் மட்டும் நிரம்பிய தாயின் உலகம் அது.

'சித்திரா.............' அவனது குரல் அவளைக் குறுக்கறுத்தது. பதட்டமாய் எழுந்தாள். இரண்டாந் தடவை கூப்பிடுவதற்கிடையில் அவனுக்குக் கோபம் பொங்கும். கோபப்படுவது அவன் உரிமை என அவன் மனதில் படிவித்தவர் யார்? அவளுள் வழமையான கேள்வி எழுந்தது. அவசரமாய் நடந்து போய்க் கதவு திறந்தாள். அவளது குங்குமம் துலங்கும் பொன்னிற முகத்தை ஒருகணம் உற்றுப் பார்த்தான். நெற்றியோரம் துளிர்க்கின்ற வியர்வை பற்றி அவன் விசாரிக்கக் கூடாதா என அவள் ஏங்கிய ஒரு காலம் இருந்தது. ஆனால் இப்போது அவ்விதம் இல்லை. அவள் திரும்பி நடந்தாள். பிறகும் குழந்தையின் அதிர்வு உணர்ந்தாள்.

ரோஜாப் பெண்ணே! பொறுத்துக் கொள்வாய். கடமை முடிந்த பிறகு கனவு காணலாம். அம்மா உன்னோடு கதைத்துக் கொள்ளலாம்... பொறுத்திரு குட்டிப் பெண்ணே?

மனதினுள் எண்ணம் ஓடிற்று. அவன் முகங்கழுவப் போனான். அவள் சாப்பாட்டறை நோக்கி நடந்தாள். அவனுக்குத் தானாகப் பரிமாறிக் கொள்ளமுடியாது. பரிமாறும் செயல் தாயிடமிருந்து மருமகளுக்குச் செல்கின்றபோதில் ஆண் அதைச் செய்துகொள்ள வேண்டியதில்லை.

'சித்திரா...' அவன் உரத்து அழைத்தான். அக்குரல் அவளது காதுகளை வலிமையாக அறைந்தது. வீட்டின் பின்புறமிருந்து வந்தது அழைப்பு. அவள் அவசரமாய் நடந்தாள். கிணற்றடியில் நின்றான் அவன். குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

'கணேஷ் வந்தானா?....'

'இல்லை.....' மெலிந்த குரலில் சொன்னபடியே மேலதிகமாக வலமும் இடமுமாகத் தலையை அசைத்தாள். அவன் வீட்டினுள் வந்ததும் பின்னால் நடந்தாள். அதே கேள்வியை சாப்பாடு பரிமாறும் போது சினேகபூர்வமாய் அவன் கேட்டிருக்கக் கூடாதா எனும் ஏக்கம் அவளுள் கிளர்ந்தது. அவ் எண்ணங்கிளர்ந்ததற்கான சாயல் எதுவுமே இன்றி அவளது முகம் மட்டும் நிர்ச்சலனமாய் இருந்தது. மௌனமாய்ச் சாப்பாடு பரிமாறத் தொடங்கினாள். மனதினுள் ரோஜாப் பெண்ணின் நினைப்பை வளர்க்கத் தொடங்கிய பிறகு முன்னர் போல பதுமையாக அவளுக்கு இருக்க முடியாமல் இருக்கிறது.

வைத்தியசாலைக் கட்டில். வலதுபுறம் திரும்பிப் படுத்தாள். பிஞ்சுமகள் பூவாய் படுத்திருந்தாள். அவளது இடுப்பினுள் பூம் பாதங்களை நீட்டியிருந்தாள். அவள் மனதில் மகளுக்கு வைத்துப் பார்த்த பெயர்கள் எல்லாம் ஊர்வலம் போயின.

'ஸ்வேதிகா....' மிருதுவாய் அழைத்தாள் அவள். ஸ்வாதி பிரகாசமிக்க நட்சத்திரம். ஸ்வஸ்திகம் வணங்குவதற்குரிய சின்னம். மேலும் அழைக்கும்போது நொறுங்கும்படி அழைக்கமுடியாத பெயரது. அவளுக்கு நிறையவும் பிடித்திருந்தது.

'என்.... ஸ்வேதிகா....' இந்தக் குட்டிப்பெண் அவள் வாழ்க்கைத் தோட்டத்தின் அற்புதமான மலர். அவளை அன்பும் துணிவும் நிறைந்தவளாய் வளர்த்தாக வேண்டும். பெயர் சொல்லா மூடப் பதுமையாகப் பெண் வளர வேண்டாம். அவளுள் நினைப்போடிற்று.

காலடிச் சத்தத்திற்குத் திரும்பினாள். அவன் நின்றிருந்தான். அவளுள் தன்னையறியாத அன்பு சுரந்தது. அவனது விழிகளைத் துணிவோடு சந்தித்தாள். ஆனால் அந்த முகத்தில் எந்தவிதமான மென்மையான உணர்வுகளையும் கொண்டிருக்காத இரு சிறிய விழிகளையே கண்டாள். மெல்ல விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள். அவன் அக்கணமே அவ்விடத்தை விட்டு நகர்ந்தால் நன்றாக இருக்கும் என எண்ணத்தலைப்பட்டாள் அவள்.

'சுகந்தினி என்று கூப்பிடலாம்..........' அவளது கனவிலும் நனவிலும் எழுந்த ஆயிரக்கணக்கான பெயர்களுள் ஒருநாள்கூட அவளைக் குறுக்கறுக்காத பெயரது. எந்த இடத்திலும் பொதுவான பெயராய்த் தவழ்ந்து திரியும் அது. பின்னர் பாடசாலை நாட்களில் தந்தையின் முதலெழுத்தின் துணையோடு மட்டும் மகள் இனங்காணப்படுவாள். சு. சுகந்தினி என்றும், நாளடைவில் சுனா என்றும் அவளது பெயர் மாறும். அவள் சுகந்தனின் மகள் என்பதையும் இவ்விதம் வலியுறுத்திக் கொள்ள வேண்டுமா? அவள் வயிற்றில் வந்த காலந்தொட்டு ரோஜாப் பெண்ணாகவே நினைவில் வளர்ந்து வந்தாள். பெயரில்கூட தனித்து நிற்கமுடியாத கோழையாக அவள் இருக்கக் கூடாது. தாயின் நெஞ்சத்தில் பொறி யாய் கிளம்பிற்று புதிய துணிவு. ஒரு ரோஜா முள் அவள் மனக்கண்ணில் எழுந்தது. அழகிய விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். உறுதியாகச் சொன்னாள். 'ஸ்வேதிகா என்ற பெயரை வைக்கிறதாய் நான் தீர்மானிச்சிட்டன்'. அந்தக் குரலில் இருந்த உறுதி அவனைத் திகைக்க வைத்தது. முகம் மாறிற்று. அவள் வழமைபோல இல்லாது அவனது விழிகளைத் தொடர்ச்சியாக நோக்கினாள். அந்த அமைதி ஒருவித உக்கிரத்தை தன்னுள் புதைத்திருந்ததாக அவன் உணர்ந்தான். எதுவும் பேசாமல் அவன் விலகி நடந்தபொழுதில், மீண்டும் தன் குழந்தையின் பக்கமாகத் திரும்பிப் படுத்து, மெல்லக் குழந்தையை வருடி மிருதுவாய் அவள் உச்சரித்தாள் மீண்டும்

ஸ்வேதிகா....

**ச. சாரங்கா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஒரு காற்பந்தை நீ உதைப்பதன் மூலமும் உன் ஆன்ம பலத்தை அதிகரிக்கலாம்.*

- சுவாமி விவேகானந்தர்.

# நமது நோக்கு

## வாருங்கள்! விளையாட்டுத் துறையை வளப்படுத்துவோம்!!

வட - கிழக்கில் கூடிய கவனத்துடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளுள் விளையாட்டுத் துறை மிக முக்கியமானதாகும்.

கடந்த யுத்த காலங்களில் கல்வித்துறையோடு இணைந்து - விளையாட்டுத்துறை வளர்ச்சியும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இராணுவ நடவடிக்கைகளாலும், தாக்குதல் களாலும் - அன்றாடம் உயிரிழப்புக்களையும் இடப் பெயர்வுகளையும் சந்தித்து வந்த சமூகத்தில் - விளையாட்டுத் துறையின் உயிர்ப்பு என்பது எதிர் பார்க்கப்பட முடியாத ஒன்றாக இருந்தபோதும், இன்று அமைதி திரும்பியுள்ள சூழலில் விளையாட் டுத்துறையை வளப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஏராளமுள்ளன.

எத்தனையோ இடர்களுக்கும், தடைகளுக்கும் மத்தியில் - இன்று கிடைத்துள்ள போர் ஓய்வில், தமது திறமைகளை மிகப் பிரகாசமுடன் வெளிப் படுத்தி வரும் எமது இளைய தலைமுறையிடம் இருந்து கிடைத்துள்ள எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் - விளையாட்டுத்துறையை வேகமுடன் புனருத்தா ரணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டி வருகின்றன.

மாகாண மட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் முதலிடம் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவி நாடளாவிய அணிக்குத் தெரிவுசெய்யப் பட்டதும், திருமலை இந்துக் கல்லூரி மாணவன் - இலங்கையின் பாடசாலை மட்ட அதிவேக ஓட்ட வீரனாகத் தெரிவு பெற்றதும், சதுரங்க விளையாட் டில் உலக தரத்திற்குப் போட்டியிடும் யாழ். பல்கலைகழக மாணவனும் - இந்த வகையில் எம் மண்ணிலிருந்து உதித்த மாணிக்கங்களாகும்.

இவர்களைப் போல - இன்னும் ஏராளமானோர், இலைமறை காயாக, கொட்டிக்கிடக்கும் அதீத திறமைகளுடன் - தம்மை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைக்காதவர்களாக இங்குள்ளனர்.

இவர்களை - வெளிக்கொண்டு வந்து, எமது மண்ணின் புகழ், விளையாட்டுத்துறையின் ஊடாகவும் உலகெங்கும் பரவச்செய்வதற்கு செய்ய வேண்டி யவை எமக்கு முன் ஏராளமாகக் காத்திருக்கின்றன.

குறிப்பாக - பாடசாலை மட்டத்திலிருந்தே விளை யாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யவேண்டியது இன்று மிக அவசியமானதாக உள்ளது.

வட - கிழக்கிலுள்ள எத்தனையோ பாடசா லைகள் தகுந்த விளையாட்டு உபகரணங்கள் இன் றியும், ஏன் மைதானங்கள் கூட இல்லாத நிலை யிலும் இருப்பது வேதனையான உண்மையாகும்.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து - ஆர்வமும் திறனும் உள்ளவர்களை ஊக்குவிக்க பாடசாலைச் சமூகமும், பெற்றோரும், நிதிவளம் கொண்டோரும் முன்வர வேண்டும்.

எது எதற்கோ எல்லாம் - பணத்தை தண்ணீரா கச் செலவழித்து விளம்பரங்கள் தேடுபவர்கள், நல்லதொரு விளையாட்டு வீரனை, வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து - அவரது செலவீனங்களை ஈடு செய்து, அவரை உலகத்தரம் வாய்ந்த வீரராக உருவாக்க உதவலாமே?

யாழ்பாணத்திலிருந்து சிறந்த சதுரங்க வீரராக உருவாகி வரும், யாழ்.பல்கலைக்கழக மாணவன் சீவோதயன் உலகத்தரப் போட்டிக்குச் செல்வதற்கு திறமையிருந்தும், அதற்கான நிதியுதவியை எதிர் பார்க்கும் நிலையிலுள்ளார். இவரைப் போன்றவர் களுக்கு, எமது சமூகத்தின் தாராள மனம் படைத்த செல்வந்தர்களும், நிறுவனங்களும் உதவி செய் வார்களேயானால், எமது மண்ணிலும் ஒரு விஸ்வ நாதன் ஆனந்தோ, கஸ்பரோவோ நிச்சயம் தோன்ற முடியும்!

எனவே, விளையாட்டுத்துறை ஆர்வலர்களும் அபிமானிகளும், கல்வி சார் சமூகமும் ஏனைய நிறு வனங்களும் இணைந்து - எமது மண்ணின் விளை யாட்டுத்துறையை வளம்படுத்தி, எமது மண்ணிலி ருந்தும் - கார்ல் லூயிஸ்களையும், சுசந்திகாக்களை யும், சச்சின் டெண்டுல்கர்களையும், ரொனால்டோக் களையும் உருவாக்க முயல்வோம்.

எங்கள் கைகளை எதிர்பார்த்திருக்கும் இரத்தி னங்களை பட்டை தீட்டி, உலகெங்கும் அவை பிரகாசிக்க வழிசெய்வோம்.

# வருடந்தோறும் பல நூறு ஏக்கர் கரையோரத்தை கடல் விழுங்குகிறது

## பேராசிரியர் என்.வில்சன் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் கரையோரத்தில் வருடந்தோறும் 3 மீற்றர் நிலப்பரப்பு கடலால் விழுங்கப்பட்டு வருவதாக கொழும்புப் பல்கலைக்கழக புவியியல் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் டபிள்யூ.என்.வில்சன் தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் இலங்கையின் கரையோரப் பகுதியில் 3 மீற்றர் பிரதேசத்தைக் கடல் விழுங்கி வருகின்றது. இதனால் வருடமொன்றுக்குப் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு கடலினுள் அமிழ்ந்து வருகின்றது.

இந்த நிலைக்கு- காற்று, சட்ட விரோதமாகக் கட்டுப்பாடின்றி நடக்கும் மண் அகழ்வு, இயற்கை சமநிலைச் சீர்குலைவு என்பன முக்கிய காரணிகளாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் இலங்கைத் தீவு நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை இழந்து வருவதால் எதிர் காலத்தில் இதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கையின் கரையோரப் பகுதி விரைவிலேயே கடலினுள் அமிழ்ந்து விடும் அபாயம் இருப்பதாகச் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றது.

# கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கக் கோரிக்கை

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குள் உள்ளடக்கிய பிரதேசத்தை - இரண்டாகப் பிரித்து புதிதாக ஒரு பிரதேச செயலகத்தை அமைக்கக் கோரி வலி.கிழக்கு சனசமூக நிலையங்களின் ஒன்றியம் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பான அறிக்கையொன்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு-அதன் பிரதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக-ஒன்றியத் தலைவர் மு.பொன்னுத்துரை தெரிவித்தார்.

இப் புதிய பிரதேச செயலகமானது தொண்டமனாறு தொடக்கம் சிறுப்பிட்டி வரை உள்ளடக்கியதாக அமைவு பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய பிரதேச செயலகம் அச்சு வேலிப் பகுதியில் அமையப்பெற்றால்-பொது மக்கள் தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(80)

## இளவாலை, பெரியவிளான், மாதகல்

# மீளக் குடியமர்ந்தோருக்கு உதவி வழங்கும் பணிகள் ஆரம்பம்

(இளவாலை)

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் பெரியவிளான், இளவாலை, மாதகல் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்டோருக்கு முன்னுரிமை அடிப்படையில் கீயூடெக் (HUDEC) நிறுவனம், எக்கோ, கரித்தாஸ் போன்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் இணைந்து வீடுகள் புனரமைத்தல், விவசாயச் செய்கை, கிணறுகள் புனரமைத்தல், மலசலகூடங்கள் அமைத்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இச் செயற்திட்டங்களின் முதற் கட்டமாக நேற்று முன்தினம் பெரிய விளான், இளவாலை, மாதகல் பகுதி விவசாயிகளுக்கு வெங்காயம், நெல் போன்ற விவசாயப் பயிர்கள் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக அடுத்த வாரமளவில் மரக்கறிப் பயிர்களுக்கான விதைகளும், மற்றும் விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் மிகவிரைவில் மீளக் குடியமர்ந்தோருக்கு ஏனைய திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் கியூடெக் நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பல வருடங்களின் பின்னர் மீண்டும் மாங்குளத்தில் எரிபொருள் நிலையம்

(வவுனியா நிருபர்)

மாங்குளத்தில் மீண்டும் எரிபொருள் நிரப்பு நிலையம் செயற்படத் தொடங்கியுள்ளது. மாங்குளம் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அமைக்கும் பணிகள் நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் 18ஆம் திகதி முதல் எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்கத் தொடங்கி இருக்கிறது.பெருமளவிலான வாகனங்கள் இங்கு எரிபொருளை பெறுவதற்காக நிற்பதையும் காணமுடிகிறது.

## இணுவில் இந்துக் கல்லூரியில்

# ஆசிரியர் பற்றாக்குறையால் கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு

(வலி-வடக்கு)

இணுவில் இந்துக் கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி, மற்றும் உயர்தர வகுபிற்கான - இந்து நாகரீகம், புவியியல், தமிழ்,ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவிவருவதால்,- மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கல்லூரியில் மாணவர் தொகையும் அதிகரித்து வருவதால்-தளபாடப்பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் சில வேளைகளில் மாணவர்கள் தரையில் இருந்து கற்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இக் குறைபாடுகள் குறித்து கல்லூரி அதிபர்-கல்வித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார். (105)

# தென்னிலங்கை செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் பலர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் மானுடத்தின் தமிழ்க் கூடல் என்ற நான்கு நாள் கலை இலக்கிய மாநாட்டில் செய்திகளை திரட்டிக் கொள்ளவே இவ்வாறு பெருந்தொகையான செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் படை எடுத்துள்ளனர். (க)

# கொத்தணி பஸ் நிறுவனங்களின் 39 சதவீதப் பங்குகள் தனியாருக்கு!

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச்சபை டிப்போக்கள் மூலம் கிடைக்கும் வருமானம் அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குக்கூட போதுமானதாக இல்லை; இதனால் கொத்தணி பஸ் நிறுவனங்களின் சில பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்வதன் மூலம் சிறந்த முகாமைத்துவத்தை எதிர்பார்க்கலாம் என போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொத்தணி பஸ் நிறுவனங்களின் 39 வீதப்பங்குகளை எதிர்வரும் 27ஆம் திகதி தனியாருக்கு விற்பனை செய்ய இருப்பதாகவும் இதற்கான பல முதலீட்டாளர்கள் ஏற்கனவே முன்வந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துச்சபை தனியார் மயப்படுத்தப்பட்டாலும் நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரணியில் விபத்து இருவர் காயம்!

(வரணி)

வரணியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் வடமராட்சியில் இருந்து வந்து கொண்டிருந்த காரும் மோட்டார் சைக்கிளும் கரம்பன் வீதியில் பாலத்திற்கு அண்மையில் மோதியதால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டியைச் சேர்ந்த இ.சுகந்தன், சி.கந்தசாமி ஆகிய இருவருமே படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்னர். (27)

# ஆலயத்தில் திருட்டு!

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோயிலில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடும் மழை பெய்ததைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர் கோஷ்டி ஆலயத்தின் மூலஸ்தானக் கதவை உடைத்து சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான வெள்ளியினாலான கீரீடம் ஒன்றை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மக்களை நெறிப்படுத்துவதாகவே சமய மார்க்கம் இருக்க வேண்டும்!

## விருந்தினர் பக்கம்

*அருள்வடிவாக, சத்யசொரூபமாக, இறைபணியொன்றையே தன் ஜீவமூச்சாகக் கொண்டு சைவ உலகுக்கு ஈடிணையற்ற, சேவை புரிந்து வருகின்ற அருட்கவி சி.விநாசித்தம்பி ஐயா 'நமது ஈழநாடு'க்கு அளித்த நேர்காணல்.*

**கேள்வி**:அப்பழுக்கற்ற இறைபணிக்கே தங்கள் உடல், பொருள், ஆவி என அருள் வடிவாகக் காட்சியளித்து நாள்பூராவும், அதற்காகவே சகல கருமங்களையும் தாங்கள் ஆற்றி வருகின்றீர்கள், என்பதை நாடறியும், முழு சைவ உலகமுமே அறியும். இந்த வகையில், தற்போது சில ஆலயங்களில் நிர்வாகச் சிக்கல்கள் உருவாகி அவை நீதி மன்றம் வரை செல்கின்ற நிலை பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்**:சமயப்பணி என்று வந்து விட்டால் அங்கு குறுகிய சுயநலப் போக்குகளுக்கு இடமளிக்கக் கூடாது. இறைவன் பால் ஈர்ப்பு என வெறுமனே பிதற்றிக் கொண்டு பதவிமோகம் கொண்டு வக்கிரபுத்தியுடன் செயற்பட எவராவது முனைந்தால் அதைச் சைவ உலகம் மன்னிக்காது. நான், எனது என்ற மமதை உள்ளத்தில் தோன்றினால் பின்னர் இறைபணி என்ற பதத்துக்கே அர்த்தமற்றுப் போய்விடும். ஆன்மா லயிக்கும் ஆலயத்தில் எந்த ஏற்றத் தாழ்வுக்கும் இடமில்லை. எவ்வித குரோத குணமும் அற்ற, சமுதாயத்தில் எவரையும் ஒருவரையொருவர் தூய சிந்தனை அடித்தளமாக இருந்தால்தான் சமயப் பணிக்கு ஒருவர் அருகதையுடையவராகின்றார். சைவசமயிகளிடம் உயர்வு, தாழ்வு என்ற நிலை முற்றாகக் களையப்பட வேண்டும். அதிகார மோகம், பதவியாசை என்பன ஆலய நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் "ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்" என்பது போலாகி விடும். சகல மனிதரிடமும் வாஞ்சை கொண்டொழுகுபவனே அசல் இந்துவாயிருக்க முடியும். அத்தகையவனே சிவனின் பார்வை எனப் போற்றப்படும் தகுதி பெறுகிறான்.

**கேள்வி**:தங்களுக்குக் கிடைத்த கௌரவப் பட்டங்கள் ஏராளம் என்பதனை சைவ உலகு நன்கறியும். எனினும் தாங்கள் இவை பற்றி விளக்குவது பொருத்தமாயிருக்கும் எனக் கருதுகின்றோம்.......



அருட்கவி.சி.விநாசித்தம்பி

**பதில்**:தூய இறை தொண்டன் எனும் பட்டத்தை விட எனக்கு வேறெந்த பட்டமும் பெரிதாகத் தோன்றவில்லை. எனினும் இவை பற்றிக் கூறுவதாயின், நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் தண்ணீர்ப் பந்தலில் 1963ஆம் ஆண்டு உற்சவ இறுதி நாளில் நல்லூர் மாப்பாணதாச முதலியார் 'அருளோடு சேர்ந்த கவித்துவம் உற்றவர்" எனப் பாராட்டி 'அருட்கவி' எனும் பட்டத்தைச் சூட்டினார்.

அதனைத் தொடர்ந்து பிரசங்க பாகவதர், அருட்புலவர், சக்தி வாசகர், திருவருட்செல்வர், சைவமணி, சிவகவிமணி, அருட்கவியரசு,மூதறிஞர், திருவருட்கவிமணி எனப் பல பட்டங்களைச் சான்றோர் வழங்கினர். எனது சைவமணி மேன்மேலும் வலுவுற இப்பட்டங்கள் எனக்கு உறுதுணை புரியும் என அச் சான்றோர் எண்ணினர் போலும். யாழ்.பல்கலைக்கழகம் முதுதத்துவமாணி(M.P.H.D) என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. இறை பணிக்கு அணிசேர்ப்பனவாக ஆய்வாளர் கருதியதால் தான் இக் கௌரவம் எனக் கருதுகின்றேன்.

**கேள்வி**:- தங்கள் மேலான நிர்வாகத்தில் இயங்கும் அளவெட்டி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் தனிச்சிறப்பு குறித்து எதனைக் கூற விழைகிறீர்கள்?

**பதில்**:- இந்த தேவஸ்தானத்தில் தனியே நாராயணர் வழிபாடு என்றில்லை. கீத உபதேசம் இங்கு, மிக நுண்ணிய வழியில் பின்பற்றிப் பேணப்படுகின்றது. இங்கு சிவன், பிள்ளையார், முருகன் மற்றும் விஷ்ணு, ஆஞ்சநேயர், வைரவர் எனும் மும்மூர்த்திகளும் ஸ்ரீநாராயணரைச் சூழ வழிபாட்டுக்கென வைக்கப்பட்டுள்ளன. நாராயணர் தேவஸ்தானம் ஒன்றில் சகல பரிவார மூர்த்திகளும் ஒருசேர வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வருவது இங்கு மாத்திரம்தான் என்பதில் இதயநிறைவும், பக்தித் தெளிவும் மேலிடுகின்றன.

**கேள்வி**:- இந்து சமயப் பேரவை தங்களைத் தலைவராகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இப் பேரவை பற்றி சொல்லுங்கள்.

**பதில்**:- புராண, இதிகாச,ஆகமங்கள், வேதங்கள் ஆகியவற்றின் உண்மை உணர்ந்து, தெளிந்து பொய்மை அகன்று மெய்மை மேலோங்க வேண்டும் எனும் உயரிய குறிக்கோளை இலட்சியமாக, அடிநாதமாகக் கொண்டு உருவானதே இந்து சமயப் பேரவை. பிறமதத்தலையீடு, ஊடுருவல் சைவ சமயிகளிடையே புகுந்து சைவத்தின் தனித்துவத்தைப் பாதித்து, சிதைத்து விடக்கூடாது என்பதில் பேரவையின் விழிப்புமிக்க செயற்பாடு வலுவாக உள்ளது.

இளம்பராயத்திலேயே மக்களுக்கு சமய அறிவுக்கான அத்திவாரம் இடப்பட வேண்டும் என்பதுவும் பேரவையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். மேலும் வறிய நிலையில் வாடுகின்ற, வாழ வசதியற்று திக்கற்று அல்லலுறும் அநாதைச் சிறுவர், சிறுமியர்க்கு வாழ வழிகாட்டி, அவர்களுக்கு சகல வசதிகளுமளித்து அரவணைப்பதுவும் பேரவையின் செயற்பாடுகளில் ஒன்றாக உள்ளது.

இச்சிறுவர்களை நெறிப்படுத்தி சமய மார்க்கத்தில் அவர்களை ஈடுபடுத்தி வருகிறது பேரவை. இச் சிறுவர்க்கு சைவ அறிவுடன் கல்வி, உயர் கலைத்துறை, வாழ்க்கைக்கான தொழில்நுட்ப, உயர்கல்வி என்பனவற்றுக்கான முயற்சிகளும் செயற்பாடுகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற் பயிற்சி என்பதுவும் இதில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**கேள்வி**: மிக நீண்ட காலமாக ஆன்மீகத்துறையில் ஈடுபட்டு, சமயப் பணிக்காகத் தங்களையே அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்றீர்கள். இந்த வகையில் சமய நெறி தழைத்தோங்கும் நோக்குடன் தாங்கள் எழுதிய நூல்கள் பற்றிய கூற்று விளம்புவீர்களா?

**பதில்**: நயினை நாகபூசணி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி முதல் 7 ஆலயங்களுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளேன். வண்ணை வீரமாகாளி திருப்பொன்னூஞ்சல் முதல் 20க்கும் மேற்பட்ட ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாக்களைப் பாடியுள்ளேன். தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி பிள்ளைத்தமிழ், காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ முருகன் பிள்ளைத்தமிழ், அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் பிள்ளைத்தமிழ் என பிள்ளைத்தமிழ் இலக்கியங்களையும் பாடியுள்ளேன். 1964ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் எனது நூல்கள் வெளியாகிக் கொண்டு தான் இருக்கின்றன. ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானமே எனது 36க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கின்றது. இலங்கையிலுள்ள நிறுவனங்கள், ஆலயங்கள் எனது கவிதைகளைத் தாங்கிய 120க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளன. இவ்விலக்கியங்களில் மிக, மிகச் சிறப்பு வாய்ந்தவை, ஸ்ரீசெல்வச்சந்நிதிக் கந்தன் புராணம், கந்தபுராண வசன காவியம், தெல்லிப்பளை துர்க்கா தேவி திருவருட்கவி மாலை, துர்க்காதேவி திருவந்தாதி எனப்பாராட்டுவர். இது எனக்கு மனநிறைவை அளிக்கிறது. அவ்வப்போது பத்திரிகைகளிலும், மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்களிலும், ஆண்டுவிழா மலர்களிலும் என பல ஆலயங்களாலும் வித்தியாசாலைகளிலும் கட்டுரைகள் என்னிடம் பெறப்பட்டுப் பிரசுரமாகியுள்ளன. பிரசுரமாகி வருகின்றன. பல நூல்களுக்கு ஆசியுரை, அருளுரை, வொழ்த்துரை என பெறப்படுகின்றன. இவற்றையெல்லாம் நான் ஈண்டு குறிப்பிடுவது இறைகருணையின் பெருமை மொழியவேயன்றி, வேறெதற்குமல்ல. மிகுந்த தன்னடக்கத்துடன் இதனைப் பகர்கின்றேன். தெய்வ அருள் துணைகொண்டு என் இப்பணி தொடரும்.

**நேர்காணல்: ஸ்ரீநடா**

---

## கனகன் புளியடியில் படைத்தளம் அமைப்பதற்கு இராணுவம் முயற்சி

(மீசாலை)

தென்மராட்சி கனகன் புளியடிச் சந்திக்கு அண்மையில் - பல ஏக்கர் நிலப்பரப்பில் பெரியளவிலானதொரு படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இப்படைத்தளம் ஏற்கனவேயுள்ள இராணுவமுகாமுடன் இணைந்ததாக விஸ்தரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னரும் ஒரு தடவை இவ்வாறு படைத்தளம் அமைக்க எடுத்த முயற்சி - பொதுமக்களின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

(25)

## வன்னிக் காட்டினுள் வற்றாத நிலவூற்று



இது கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்புக் குளமருகான ஊற்றுப்புலம் காட்டுப்பகுதியில் உள்ளது. எப்பொழுதும் நீர்நிரம்பிய நிலையில் இந்த ஊற்று வன்னியில் குளங்களில் நீர்வற்றி - நீர்ப்பஞ்சம் தலைவிரித்தாடுகின்ற காலத்தில் தரைமட்டத்திலிருந்து 6அங்குலம் மட்டும் நீர்மட்டம் குறைந்து காணப்படுகின்றது. காட்டினுள் கவனிப்பாரற்று - பயனற்றுக் கிடக்கும் இந்த நீரூற்றுப்பகுதி - நிலமேற் பரப்பில் குறுகிய பரப்பில் சுண்ணக்கல் செறிவாக உள்ளது. நிலக்கீழ் நீர் அழுத்தம் கூடியதால் இங்கு நீரூற்று வற்றாது உள்ளது. இந்த இடத்தில் தொல்கால மனித வாழ்வுக்கான கட்டட அடித்தள செங்கற்கள் மட்பாண்டத் துண்டுகளும் காணப்படுகின்றன.

(அறிதிரு)

## வலி வடக்கு சமூக அபிவிருத்திக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு!

(வலி-வடக்கு)

வலி-வடக்கு பகுதியில் மேலும் சில அபிவிருத்திப் பணிகளுக்கு, நிதியுதவி கிடைத்துள்ளது.

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட 20லட்சம் ரூபாவிலிருந்து - அளவெட்டி கேணிப்பிட்டி சுடலை வீதியும், சுடலைக்கட்டடமும் புனரமைப்புச் செய்ய 7 இலட்சம் ரூபாவும், குட்டியப்புலம் கோணாவளை வீதி திருத்த 13 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றை விடத் தற்போது, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபாவும் கிடைத்துள்ளது. இந்நிதியிலிருந்து - கீரிமலை சிவானந்தா சனசமூக நிலையத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்யவும், ஈஸ்வரி சனசமூக நிலைய கட்டடம் திருத்தவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வலி-வடக்கு பிரதேச சபைத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

(105)

## க.பொ.த(உ/த) பரீட்சை விண்ணப்பம்

2003 ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக் கட்டணமாக பாடமொன்றிற்கு 60 ரூபா வீதம் அஞ்சல் நிலையத்தில் செலுத்தி-அதற்கான பற்றுச் சீட்டையும் இணைத்து-நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## பெறுமதி சேர் வரி விதிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சேவைகளுக்கு அறவிடப்பட்ட பண்டங்கள் சேவைகள் வரி 12.5 வீதம் நீக்கப்பட்டு, பெறுமதி சேர் வரியாக 20 வீதம் அறவிடப்படுமென பருத்தித்துறை நகரசபை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையானது இம்மாதம் முத்ல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(23)

## சைவபரிபாலன சபை பரீட்சை

சைவபரிபாலன சபையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி வடக்கு - கிழக்கு முழுவதும் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான சுட்டெண்கள்- அவ்வப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கம்,வெள்ளி,வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (72)

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

(அரியாலை)

மிருசுவில் பெரியனோடைப் பகுதியில் பன்றிக்கு இலக்கு வைத்த கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை விக்னேஸ்வரன் (வயது38) என்ற நபரே காயமடைந்தவராவர்.

(55)

## கடையில் கொள்ளை

(சரசாலை)

மீசாலைச் சந்தியிலுள்ள பல சரக்குக் கடையொன்றிலிருந்து நேற்று முன்தினம் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

பாவனைப் பொருட்களான பால்மா பைக்கற்றுக்கள், சவர்க்காரங்கள் மற்றும் சில்லறைப் பொருட்கள் உட்பட பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருட்டுப் போயுள்ளன.

## பாடசாலைகளில் தமிழ் மாணவர் ஒன்றியம்

(ஊரெழு)

யாழ்.மாவட்டத்திலுள்ள உயர்தரப் பாடசாலைகளில் தமிழ் மாணவர் ஒன்றியம் அமைக்கப்பட்டு வருகிறது.

வீழ்ச்சியடைந்த கல்வியை மீண்டும் கட்டியெழுப்பவும், பாடசாலைச் சமூகம் எவ்வித ஆக்கிரமிப்புமின்றி சுதந்திரமாகச் செயற்படவுமே இம் மாணவர்ஒன்றியம் ஏற்படுத்தப்படுகிறது.

இவ்வொன்றியங்கள் அதிபர் உள்ளிட்ட, ஆலோசனைக் குழுவினால் வழிநடத்தப்படும்.

(34)

## தென்மராட்சி வயல்களில் பன்றித்தொல்லை

(தென்மராட்சி)

தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து காட்டுப் பன்றிகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக வரணி, கொடிகாமம், மந்துவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல்வெளிகளில் பயிர்ச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளின் பயிர்கள் பன்றிகளின் தாக்கத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

(28)

# இலங்கைத் தீவு ஒற்றையாட்சிக்குரிய மண்ணாக என்றும் இருந்ததில்லை!

## தமிழ்க்கூடலில் வெ.இளங்குமரன் சிறப்புரை



(யாழ்ப்பாணம்)

"இலங்கைத் தீவு ஒற்றையாட்சிக்குரிய மண் அல்ல. இங்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்த மண் ஒரு அரசு அல்லது ஒரு இன ஆட்சி நிலவிய மண்ணாக இருக்கவில்லை. பல ஆட்சிகள் நில்விய மண்ணாகவே இருந்தது. வரலாறறைப்படித்தவர்களுக்கு நன்கு தெரியும். மிகக்குறுகிய விரல்விட்டு எண்ணக்கூடிய ஆண்டுகள் மட்டும் தான் இலங்கைத் தீவில் ஒற்றை ஆட்சி நிலவியுள்ளது". இவ்வாறு 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வின் இரண்டாம் நாள் அமர்வில் சிறப்புரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது- இங்கு பல அரசுகளும், பல ஆட்சி அலகுகளும் நிலவியதை மகாவம்சத்தில் கூட நாங்கள் காணலாம்.

பெரும்பாலும் பல ஆட்சிகளைக் கொண்ட மண்ணாகத்தான் இந்த இலங்கை மண் விளங்கியிருக்கின்றது. இந்த வரலாற்று உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மண் - ஒரு அரசு, ஒரு ஆட்சி நிலவிய மண் அல்ல, பல ஆட்சிகள் நிலவிய மண் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். துட்டகைமுனு, எல்லாளனை தோற்கடிக்க முன்னர் அநுராதபுரத்திற்குத் தெற்கே 31 சிற்றரசுகள் காணப்பட்டுள்ளன. இன்று ஒரு நாடு, ஒரே இனம் என்று சிலர் கூக்குரல் இடுவது போன்று இந்த மண் எக்காலத்திலும் இருக்கவில்லை.

வரலாற்றில் துட்டகைமுனு மன்னன் தன்னால் தோற்கடிக்கப்பட்ட மன்னன் எல்லாளனுக்கு கல்லறை கட்டினான். அதற்கு வணக்கம் செலுத்தியும் வந்தான். ஆனால் இன்று ஆயிரக்கணக்கான மாவீரர்களின் கல்லறைகள் சிங்களப்படைகளால் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்க்கும்போது அன்றைய துட்டகைமுனு இன்றைய சிங்களப் படையைவிட எவ்வளவு மேலானவன் என்பது புரியும். இந்த மண்ணில் சிலைகளாகக் காணப்பட்ட ஒளவையாரும், வள்ளுவரும், சோமசுந்தரப் புலவரும், பாரதியாரும் கூட சிங்களப் படைகளால் சிதைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் சிங்களப் படைகளுக்கு என்ன செய்தார்கள்? ஆயுதம் ஏந்திப்போராடினார்களா? இந்த அறிஞர்களின் சிலைகளுக்கே இந்தக் கதி என்றால் சிங்களப் படைகளின் மன உணர்வுகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பௌத்த சிந்தனைகள் என்ற வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டமிட்டு கூறப்பட்டு வந்த கருத்துக்களின் வழியிலே தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே வேற்றுமைகள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வந்துள்ளன.

மகாயான பௌத்தத்துக்கும் தேரவாத பௌத்தத்துக்கும் இடையில் நிகழ்ந்த மோதல் காழ்ப்புணர்வோடு மகாவம்சத்தில் எழுதப்பட்டுள்ளமையால்தான் தமிழ் - சிங்கள வேற்றுமை உணர்வுகள் இந்த மண்ணில் தலையெடுத்தன. காலத்துக்குக் காலம் வெளிவந்த வரலாற்றுக் கருத்துக்களே இவ்வாறு சிங்கள - தமிழ் உறவுகள் மோசமடையச் செய்து வந்துள்ளன என வெ.இளங்குமரன் தனது சிறப்புரையில் மேலும் குறிப்பிட்டார்.

# மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002

# இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த தலைவர் பிரபா விரும்புகின்றார்

## அரசியல்துறையின் புலித்தேவன் பேச்சு



(நமது நிருபர்)

"எமது மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும். மக்கள் சுதந்திரக்காற்றை நிம்மதியாக அனுபவிக்க வேண்டும் என்பதையே எமது தலைவர் விரும்புகிறார்" என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த புலித்தேவன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' மாநாட்டில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது -

போராட்ட காலங்களில் எமது மக்கள் அனுபவித்த துன்பங்கள் துயரங்கள் சொல்லில் அடங்காதவை. இந்த துன்பங்கள், துயரங்கள் அடங்கிய வாழ்வு அகன்று மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்றே எமது தலைவர் விரும்புகின்றார். அதில் அவர் உறுதியாகவும் இருக்கின்றார்.

இதனை அடிப்படையில் கொண்டு தான் தாய்லாந்துப் பேச்சு வார்த்தையில் புனர்நிர்மாணப் பணி தொடர்பாக - கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாக - மீள் குடியேற்றங்கள் தொடர்பாக வலியுறுத்திக் கேட்டிருந்தோம் என அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

# சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு தமிழ்மொழியே உதவியாக இருந்தது

## சிங்கள எழுத்தாளர் மடுவுகிரிய விஜயவர்த்தன

(நமது நிருபர்)

சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு தமிழ் மொழிதான் பெரும் உதவியாக இருந்து வந்திருக்கிறது என சிங்கள எழுத்தாளரும் இலக்கிய மொழி பெயர்ப்பாளருமான மடுவுகிரிய விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று 'மானுடத்தின் தமிழ்க் கூடல்-2002' மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றும் போது- ஆரம்பகாலங்களில் தமிழ் மொழியில் இருந்து பல இலக்கிய நூல்கள் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வாசிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்துதான் சிங்களத்தில் நல்ல இலக்கியங்கள் உருவாகின.

எமது நாட்டில் நடந்த அரசியல் யுத்தம் காரணமாகத்தான் இரு மொழிகளுக்கும் இடையில் எதிர்வினை உருவாகியது. சிங்கள மொழி அரச மொழி என்ற திணிப்பு நிகழ முற்பட்டதுதான் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியில் வெறுப்பு வரக் காரணமாக இருந்தது என நான் நம்புகிறேன்.

சிங்கள மொழியில் இலக்கியம்



படைக்கப்படுவதற்கு முன் தமிழ் மொழியில் இலக்கியம் படைக்கப்பட்டு இருக்கிறது. 1885ஆம் ஆண்டு தமிழில் நாவல் எழுதப்பட்டது. அதன பின் 1901இல் தான் சிங்களத்தில் நாவல் எழுதப்பட்டது. எனவே சிங்களத்தைவிட தமிழ் இலக்கியம் தொன்மையானது.

தமிழ், சிங்கள மொழி இலக்கியங்கள் பரஸ்பரம் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் உண்மையான உள்ளத்து உணர்வுகளை சிங்கள மக்களும், சிங்கள மக்களின் உள்ளத்து உணர்வுகளை தமிழ் மக்களும் அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறு மொழி பெயர்ப்பு இலக்கியங்களை படிப்பதால் மக்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படும் என நான் நம்புகிறேன்.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து சிங்களத்துக்கும் மொழிபெயர்க்கப்பட்ட ஆக்கங்கள் சிலதான் வெளிவந்திருக்கின்றன. முழுமையாக மொழிபெயர்ப்பு நிகழாததன் காரணத்தினால்தான் இரு மொழி மக்களுக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

எனவே தான் நாம் பல இலக்கியங்களை மொழிபெயர்த்து தமிழுக்கும், சிங்களத்துக்கும் தருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம் என அவர் உரையாற்றினார். அவரது உரை தமிழில் மிகச் சரளமாக இருந்தமையால் பார்வையாளரைக் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# நாவல், அரங்கு, மொழிபெயர்ப்பு துறைகளில் இரண்டாம் நாள் அமர்வுகள் நடந்தேறின

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 'மானுடத்தின் தமிழ்க்கூடல்-2002' இன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் மாவீரர் இனியவனின் தாய் க.லலிதாதேவி ஈகச்சுடரை ஏற்றி வைத்தார். விழாச்சுடரை 'நமது ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகாராசாவும், கூட்டமைப்பு பிரமுகர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஏற்றி வைத்தனர்.

மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்திய பின்னர் 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் நா.தமிழன்பன் வரவேற்புரையாற்றியதைத் தொடர்ந்து தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் சிறப்புரையாற்றினார்.

நாவல் அமர்வு 10.30இற்கு ஆரம்பமாகியபோது இந்த அமர்வுக்கு தி. ஞானசேகரன் தலைமை வகிக்க, கட்டுரையாளர் செ.யோகராசா, 'எண்பதுகளுக்குப் பிற்பட்ட நாவல்களில் ஈழத்தமிழர்களது உரிமைப் போராட்டம்' என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் செங்கை ஆழியான் 'மானுட விடுதலை நோக்கி ஈழத்துத் தமிழ் நாவல்கள்' என்ற கருப்பொருளில் உரையாற்றினார். நாவல் அமர்வின் நிறைவாக பேராசிரியர் நந்தி குறிப்புரை வழங்கினார்.

மாலை அமர்வுகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகின. இதில் அரங்கு அமர்வு நடைபெற்றது. இதற்கு குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமை தாங்க, கட்டுரையாளர் சிதம்பரநாதன் 'உள்+அது காட்டும் அரங்கு' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் சி.ஜெய்சங்கர் 'பங்குபற்றல் பண்பாட்டு உருவாக்கத்தில் சமுதாய அரங்கு' என்ற தலைப்பில் உரையாற்றினார். இறுதியாக க.ரதிகரன் குறிப்புரையாற்றியதைத் தொடர்ந்து அரங்கு அமர்வு நிறைவிற்கு வந்தது.

பின்னர் பிற்பகல் 3.30க்கு மொழி பெயர்ப்பு அரங்கு ஆரம்பமானது இந்த அமர்வுக்கு இ.முருகையன் தலைமை தாங்கினார். கட்டுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் "ஈழத்து இலக்கிய மொழி பெயர்ப்புக்கள் ஆங்கில வழி தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும்" என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் மடுவுகிரிய விஜயரத்தின 'இலக்கியத்தில் இனப்பிரச்சினை - தமிழ் சிங்கள மொழிகளுக்கிடையிலான மொழியாக்க முயற்சிகள்' என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார். இந்த அமர்வின் இறுதியாக ஐ.சாந்தன் குறிப்புரையாற்றினார்.

பின்னர் 5.30இற்கு தமிழக எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் 'தமிழ் இலக்கியப் போக்கும் -ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும்' என்ற கருப்பொருளில் சிறப்புரையாற்றினார்.

கலைநிகழ்ச்சிகள் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகின. இதில் தே. தேவானந்தால் எழுத்துரு நெறியாள்கை செய்யப்பட்ட 'அக்கினிப் பெருமூச்சு' என்ற நாடகம் இறுதியாக அரங்கேறியது.




## மூன்றாம் நாள் நிகழ்வுகள் (21.10.2002)

| | |
|---|---|
| காலை 9.00-10.30 | <u>ஈகச் சுடரேற்றல்</u> |
| | <u>விழாச் சுடரேற்றல்</u><br>சிவாஜிலிங்கம்<br>ஈ.சரவணபவன் |
| | <u>வரவேற்புரை</u><br>செல்வி.தமிழ்விழி |
| | <u>சிறப்புரை</u><br>செ.வரதன்<br>*விடுதலைப்போரும் தமிழ் மன வெளிப்பாடும்* |
| 10.30-12.30 | அமர்வு : <u>திரைப்படம்</u><br>தலைமை: ஞானரதன் |
| | <u>கட்டுரையாளர்கள்</u><br>அ.யோகராசா<br>*தமிழ்த் திரைப்படங்களில் ஈழத்தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு*<br>பேராசிரியர் சுனில் ஆரியரத்ன<br>*சிங்கள, தமிழ் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள்* |
| | <u>குறிப்புரைஞர்</u><br>க.சட்டநாதன்<br>விமல் சாமிநாதன் |
| 12.30-1.30 | மதிய இடைவேளை |
| 1.30-3.30 | பொது அமர்வு<br>தலைமை: அம்மன்கிளி முருகதாஸ் |
| | <u>கட்டுரையாளர்கள்</u><br>அ.சண்முகதாஸ்<br>*விடுதலையை நோக்கிய திசையில் - தமிழ்மொழி*<br>சோ.கிருஷ்ணராஜா<br>*இலக்கிய விடுதலையும் மானுட விடுதலையும்*<br>க.அருந்தாகரன்<br>*ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியல் - ஓர் பரிமாண நோக்கு* |
| | <u>குறிப்புரைஞர்</u><br>ஆ.கோடீஸ்வரன் |
| | <u>சிறப்புரை</u> |
| 3.35-4.45 | இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் |
| 4.45-5.30 | ஓவியர் ட்ராஸ்கி மருது |
| 5.30-6.15 | <u>நிறைவுரை</u><br>வே.பாலகுமாரன் |
| 6.30-8.00 | <u>கலைநிகழ்ச்சி</u><br>நாடகம்<br>*கண்ணகி வழக்குரைத்தல்*<br>பாரம்பரிய நாட்டுக்கூத்து<br>நெறியாள்கை<br>என்.எஸ்.மணியம் |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

அம்பாந்தோட்டை, மொனறாகலை, புத்தளத்துடன்

# வடக்கு - கிழக்கை புனரமைக்க 8,160 கோடி தேவையென மதிப்பீடு!

(கொழும்பு நிருபர்)

இலங்கையின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு 8160 கோடி ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதென பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் கே. யூ. குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட- கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளுக்கும், வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை, மொனறாகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்குமான புனர்வாழ்வுப் பணிகளுக்கே இந்நிதி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பெறுவதற்காக ஒஸ்லோவில் நவம்பர் 25ம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கோரிக்கை விடப்படவுள்ளது.

உலக வங்கி, யூ.என். எச்.சி.ஆர், யு.என்.டி.பி ஆகியவற்றினூடாக செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள இந்நிதியைக் கொண்டு இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல், அவர்களின் நலன் கவனிப்பு, மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவது, நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்து பொருளாதாரரீதியாக அவர்களைப் பலம்பெற வைத்தல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டங்களை முன்வைத்தே ஒஸ்லோ மாநாட்டில் இலங்கைக்குழு உதவியைக் கோரவுள்ளது. இதே வேளை- அடுத்த வருடம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவிலும் இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான மாநாடு ஒன்று கூட்டப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# பொலனறுவை எல்லைகளில் தமிழ்மக்கள் மீது கெடுபிடி!

பொலனறுவை மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களான கறப்பளை, முத்துக்கல் பகுதிகளில் பொலிஸார் பொதுமக்கள் மீது கெடுபிடிகளைப் பிரயோகித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 700க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழும் இக் கிராமங்களில் பொலிஸார் தமக்குத் தேவையான வேலைகளை இக் கிராம மக்களைக் கொண்டு செய்விப்பதாகத் தெரியவருகின்றது. அவ்வாறு வேலைசெய்ய மறுப்பவர்களின் வீடுகளுக்குச் பொலிஸார் சென்று இரவில் அச்சுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், இப்பகுதியில் உள்ள பொலிஸ் காவலரண்கள் முன்பாக மக்கள் வாகனங்களில் இருந்து இறங்கி நடந்து செல்ல நிர்ப்பந்திக்கப்படுவதாகவும், அடையாள அட்டையைக் கேட்டு அச்சுறுத்து வதாகவும் பொதுமக்களால் குற்றம் சாட்டப்படுகின்றது.

# இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகளில் நாற்பது சதவீதம் வீண்விரயமாக்கப்படுகின்றது!

## உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹெரால்ட் கவலை

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவிகளில் அறுபது சதவீதமான நிதியே அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாக உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹெரோல்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கைக்கு வழங்கப்படும் வெளிநாட்டு நிதி உதவிகளில் 40 சதவீதமானவை வீண்விரயம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையை மாற்றி அதிகளவிலான நிதியைப் பயனுடையதாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் மேலதிக நிதியுதவிகளை வழங்க உலக வங்கி தயாராக இருக்கின்றது.

தற்போது வழங்கப்படும் நிதியுதவியை சுமார் 35 சதவீதத்தால் அதிகரிக்க உலகவங்கி தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கைத்துப்பாக்கி....

அவர் அழைப்பிதழைச் சமர்ப்பிக்காத நிலையில் இருந்தார். அந்த நேரத்தில் அருகில் இருந்தவர்கள் இவரின் இடுப்பில் கைத்துப்பாக்கி இருந்ததைக் கண்டனர். இதை அவதானித்த மேற்படி நபர் பதற்றமடைந்து நிதானமிழந்த போது அவரின் இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கி தவறிக் கீழே விழுந்தது.

இந்த நேரத்தில் அருகிலிருந்த பார்வையாளர்களும் ஒழுங்கமைப்பாளர்களும் இவரை மடக்கிப்பிடித்து அங்கிருந்த புலிகளின் உறுப்பினர்களிடம் ஒப்படைத்தனர். புலிகள் அருகிலிருந்த வாகனத்தின் மூலம் அவரை அழைத்துச் சென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயலகத்தில் ஒப்படைத்து அவரது ஆயுதத்தையும் ஒப்படைத்தனர்.

அந்த ஆயுதம் தயார் நிலையில் ரவைகள் ஏற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வானது மூவினக் கலைஞர்களும், படைப்பாளர்களும், பத்திரிகையாளர்களும், பற்றாளர்களும் ஒன்றுகூடி நடத்துகின்ற இந்த நிகழ்வின் அமைதியைக் கெடுப்பதாகவும் அதன் மூலம் நிரந்தரமான அமைதி ஏற்படுவதற்கு தடைக்கல்லை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது. எனவே இந்த நிகழ்வை வன்மையாகக் கண்டிக்கின்றோம். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மேற்படி நபரை ஸ்ரீலங்காப் பொலிஸிடம் ஒப்படைத்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.

மேற்படி நபர் மதுபோதையில் இருந்துள்ளார். இவருடைய பெயர் ஜெயா மாஸ்டர். இவர் ஒரு புளொட் இயக்க முக்கிய உறுப்பினர். இவரை ஏற்றிக்கொண்டு வந்திருந்த இன்னொரு நபர் இவரை மக்கள் மடக்கிப் பிடித் ததையடுத்து தப்பியோட முற்பட்ட போது மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தப்பியோடி உள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தப்படி மாற்றுக் குழுவினர் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. எனவே இது யுத்த நிறுத்த மீறல் என்பதுடன் அமைதியை கெடுக்கின்ற செயலாகவும் அமைகிறது. ஆகவே நாம் இது பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெளிவுபடுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கக்கோரியிருப்பதுடன் இனி வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருக்கும் வண்ணம் பார்த்துக்கொள்ளுமாறும், மக்களின் இயல்பான அமைதி வாழ்க்கையில் - எந்த வொரு பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதை யும் சுட்டிக் காட்டியுள்ளோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸார் - சமர்ப்பித்தது பிரபாவின் கைரேகையா?

## மத்திய வங்கி குண்டுவெடிப்பு வழக்கில் சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த வழக்கு விசாரணை தொடர்பான தீர்ப்பு இம்மாதம் 31ம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவினால் வழங்கப்படவுள்ளது.

இந்த வழக்கின் முதலாவது எதிரியாக குறிப்பிடப்பட்டிருக்கும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கைரேகை எனக் கூறிப் பொலிஸாரால் கையளிக்கப்பட்ட கைரேகை குறித்து சட்டத்தரணி ஜோய் மகாதேவன் சந்தேகம் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மகாதேவன் இந்தச் சந்தேகத்தை தனது தொகுப்புரையில் தெரிவித்துள்ளார். இரகசியப் பொலிஸ் அதிகாரி புண்ணியா டீ சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் வேலுச்சாமி கரிகாலன் என்பவருடைய கைரேகை என்றே அது குறிப்பிடப்பட்டுள்ளது.

இது புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடையது என்பது சந்தேகத்திற்கிடமானது என சட்டத்தரணி தனது தொகுப்புரையில் மேலும் குறிப்பிட்டார்.

### 45,000 தப்பியோடிய...

கேட்டுள்ளார். இதற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் தேடுதல் வேட்டைகளுக்கு முப்படைகளின் உதவியைப் பெறுமாறும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரும் அதிகாரிகளும் படையில் இருநது தப்பியோடியுள்ளதாகப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடித் தலைமறைவாகியுள்ள இப்படையினரே நாட்டில் நடைபெற்று வரும் குற்றச் செயல்களுக்கு பெருமளவில் காரணமாக இருப்பதாகவும் பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

### பாடசாலை தவணை அறிவிப்பு

நேற்றைய எமது பத்திரிகையின் 3ம் பக்கச் செய்தியில், அடுத்த ஆண்டுக்கான பாடசாலைத் தவணை அறிவிப்பு என்ற தலைப்பின் கீழ் வெளிவந்த செய்தியில் பாடசாலை நாட்கள் என்ற வசனத்திற்குப் பதிலாக தவறுதலாக தவணைக்கான விடுமுறை என அச்சாகியுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

### நோர்வே...

வெளியே ஆர்ப்பாட்டம் செய்த பெருமளவிலான ஜே.வி.பி ஆதரவாளர்கள் நோர்வேக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு இருந்தனர்.

"நோர்வே அரசே இலங்கைப் பிரச்சினையில் தலையிடாதே", "நாட்டைப் பிளவுபடுத்தாதே", "பலஸ்தீனப் பிரச்சினையை வளர்த்துவிட்டது போல இலங்கைப் பிரச்சினையை வளர்க்காதே", "பேச்சுக்களுக்கு மத்தியஸ்தம் வகிக்க நோர்வேக்கு தகுதியில்லை" போன்ற கோஷங்கள் ஜே.வி.பியினரால் எழுப்பப்பட்டன.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நோர்வேக் குழுவினர் தமது வன்னி மற்றும் யாழ்ப்பாண விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அம்பாந்தோட்டைக்குச் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மரண அறிவித்தல்களுக்கு
40 வீத விசேட கழிவு
'நமது ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்களுக்கு - விளம்பரக் கட்டணங்களில் 40 சத வீத விசேட கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம் -பொதுமுகாமையாளர்

தேவை
பத்திரிகை விநியோகப் பணிக்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை.
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடுவீடாக சென்று பத்திரிகை விநியோகம் செய்வதற்கு விருப்பம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு சமாதானக் குழுக்கள் அமைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம்- அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பகுதிகளில் தமிழ்-முஸ்ஸீம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் சமாதானக் குழுக்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு இந்தச் சமாதானக் குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிய வருகின்றது.

பிரதேச ரீதியாக தமிழ்மக்கள் சார்பில் இருபது பேரையும், முஸ்ஸீம் மக்கள் சார்பில் இருபது பேரையும் கொண்டதாக இச்சமாதானக் குழு அமையும் எனவும், சமாதானக குழுவில் உள்ள பிரதிநிதிகள் இரு பகுதி மக்களையும் கட்டுப்படுத்தக் கூடியவர்களாக இருப்பர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சமாதானக்குழு விரைவில் இயங்கத் தொடங்கும் எனவும், பின்னர் பிரதேச ரீதியாக விஸ்தரிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தெரிவித்தார்.

# வவுனியா படை முன்னரங்கில் பயிற்சியின்போது வெடிவிபத்து!

(நமது நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் படையினரின் முன்னரங்க நிலைகள் அமைந்துள்ள இரணை இலுப்பைக் குளம் இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் . மேலும் எட்டுப் படையினர் படுகாயமடைந்தனர்.

இரணை இலுப்பைக்குளம் முகாமில் குண்டு வெடிக்க வைக்கும் பயிற்சியில் படையினர் ஈடுபட்டிருந்த போதே இந்த வெடிவிபத்து ஏற் பட்டது. கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் ஒரு இராணுவச் சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த எட்டுப் படையினரும் அவசர சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டனர்.

### வடக்கு...

தப்படவிருக்கும் ஆர்.ஆர்.ஆர். செயற்திட்டத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான மார்க்கங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. அத்துடன் ஏற்கனவே திறைசேரியில் இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியும் எந்த வகையான செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, குடிநீர் விநியோகம் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எனப் பல செயற்திட்டங்கள வட-கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

இவற்றைவிட யாழ்.குடாநாட்டிலும் வடக்கின் ஏனைய பகுதிகளிலும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண வேலைத்திட்டங்கள் பல உள்ளன. இதற்காக உடனடியாக பலநூறு மில்லியன் ரூபா தேவையாக உள்ளது. ஆரம்ப மதிப்பீடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதை விட தற்போது அத்தொகை அதிகமாக தேவையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்குடியேற்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தடையாக உள்ள விடயம் - தேவையான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்றே தெரிவிக்கப்பட்டு வந்தது. இன்றைய மேற்படி மாநாட்டின் போது இவ்விடயம் குறித்தும் ஆராயப்படவுள்ளது. (க)

### நெடுந்தீவில் பிடியாணை

(தீவகம்)

நெடுந்தீவு ஈ.பி.டி.பி முகாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளதுடன் வாள் வெட்டுக்கு இலக்கான நபர் உட்பட சிலருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் நேற்றுக்காலை நெடுந்தீவுக்குச் சென்றிருந்தனர். இதையடுத்து நெடுந்தீவுப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

### தமிழ்மொழி...

தால் தாய்மண்ணைச் சுரண்டுபவர்களை, அபகரிப்பவர்களை, ஆக்கிரமிப்பவர்களை எதிர்த்துப் போராடுவதும் ஒவ்வொரு மனிதனதும் கடமையாகிறது என்பதைப் போராளிகளாகிய நீங்கள் உலகிற்குச் சொல்கிறீர்கள்.

நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது கண்ட காட்சிகள் எனது மனதைக் குடைந்தன. எப்படி வளமான ஒரு தேசம் அழிந்து போகிறது என வருத்தப்பட்டேன்.

இந்த அழிவுகளையும் போராளிகளையும் அவர்களது போராட்டத்தையும் இலக்கியமாக்க வேண்டும். இங்குள்ள இலக்கியவாதிகள் ஒவ்வொரு போராளியைப் பற்றியும் ஒவ்வொரு இலக்கியத்தைப் படைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (லி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.